2 பழைய கல்வித்திட்டம் தொழிற்கல்வியைப் புறக்கணித்தமையாகும்
3 தொழில்கள் எந்திரமயமாக்கப்பட்டதாகும்
4 நிலமின்மையாகும்

24 அமெரிக்கநாடுகள் சுதந்திரப் பிரகடனம்செய்த ஆண்டு

(1) 1747 (2) 1474 (3) 1774 (4) 1847

25 இலங்கையில்முதன்முதல் தேசியமயமாக்கப்பட்டசேவை

1 இறக்குமதி ஏற்றுமதி (2) பஸ்போக்குவரத்து
3 காப்புறுதி (4) வங்கி

26 இலங்கையில் மதுஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தவர்

1 A. E குணசிங்க 2 D.B ஜயதிலக
3 F. R சேனநாயக்க 4 E. S சேனநாயக்க

27 சுதந்திரம், சகோதரத்துவம் சமத்துவம் என்னும் கோரிக்கைகளின் அடிப்படையில் உருவாகியது

1 ஆங்கிலப்புரட்சி 2 அமெரிக்கப்புரட்சி
3 இரசியப்புரட்சி 4 பிரெஞ்சுப்புரட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 இன்றும் ஆபிரிக்காவிலுள்ள போத்துக்கீசக் குடியேற்றம்

1 மொசாம்பிக் 2 அங்கோலா 3 தைமர் 4 சோமாலிலாந்து

29 முதலாளித்துவ முறையின்கீழ் இடம் பெறும் பொருள் உற்பத்தி

1 சமுதாயத்தேவை முதன்மைநிரலின்படி மேற் கொள்ளப்படும்
2 நுகர்வோரின் கேள்வியை அனுசரித்து மேற் கொள்ளப்படும்
3 சமுதாயத்தின் விருப்பத்தின்படி மேற்கொள்ளப்படும்
4 அரசாங்கத்தின் திட்டப்படி நடைபெறும்

30 சமதர்மப் பொருளாதார முறையில் பொருட்களின் விலை

1 கேள்விக்கும் வழங்கலுக்குமமைய நிர்ணயிக்கப்படுகிறது
2 சமுதாயத்தின் பொருளாதார நிலைக்கேற்ப நிர்ணயிக்கப்படுகிறது
3 செலவிடப்பட்ட உழைப்பையும் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அளவையும் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது
4 அரசாங்கத்தின் விருப்பப்படி நிர்ணயிக்கப்படுகிறது

31 பொருட்களின் விலை ஒரு நிலையிலிருப்பதாயின்

1 வழங்கல் அதிகமாயிருக்க வேண்டும்
2 கேள்வியில் மாற்றமிருத்தல் கூடாது
3 கேள்வியிலும் வழங்கலிலும் மாற்றமிருக்கக்கூடாது
4 கேள்வி குறைவாயிருக்க வேண்டும்

32 இலங்கை மக்கள் உண்ணும் உணவின் கலோரிப் பெறுமானம்

(1) 2900 க்கு மேல் (2) 2300 க்குக்கீழ்
(2) 2301—2600 வரை (4) 2601—2900 வரை

33 இரசிய நிபுணரின் கருத்தின்படி உலகில் வாழக்கூடிய மக்களின் ஆகக்கூடிய தொகை

(i) 1000கோடி (ii) 1500கோடி (iii) 5100கோடி (iv) 1250கோடி

34 இலங்கை மக்களின் சராசரி மீன்நுகர்ச்சி

(i) 73 இருத்தல் (ii) 37 இருத்தல் (iii) 35 இருத்தல் (iv) 53இரு

35 முழுஉலகின் கைத்தொழில் உற்பத்திப் பெறுமானத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின்பங்கு

i 7 சதவீதம் ii 17 சதவீதம் iii 10 சதவீதம் iv 70 சதவீதம்

36 இலங்கையில் கல்வித்திணைக்களம் முதன்முதல் நிறுவப்பட்ட ஆண்டு

(i) 1689 (ii) 1869 (iii) 1698 (iv) 1896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37 நாணயம் பெறுமதிஇறக்கம் செய்யப்பட்ட ஒரு நாட்டில் இறக்குமதிப் பொருட்கள்

1 அதிகமாகக் கிடைக்கும்
2 தட்டுப்பாடாயிருக்கும்
3 அதிக விலையுள்ளனவாயிருக்கும்
4 மலிவாகக்கிடைக்கும்

38 இலங்கையில் இன்றுவாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதன் பிரதானகாரணம்

1 மக்களிடம் அதிக பணம் இருப்பதாகும்
2 நுகர்ச்சிப் பொருட்கள் போதாமையாகும்
3 உள்நாட்டு உற்பத்தி குறைவாயிருப்பதாகும்
4 பலஇறக்குமதிப் பொருட்களின் விலை வெளிநாடுகளில் அதிகரித்திருப்பதாகும்

39 போத்துக்கீசர் காலத்தைவிட ஒல்லாந்தர் காலத்தில் நாட்டின் கல்விநிலை உயர்ந்திருந்தமைக்குக் காரணம்

1 ஒல்லாந்த அரசு ''கல்வி'' சம்பந்தமான விடயங்களைத் தமது நேரடியான கண்காணிப்பின் கீழ்வைத்திருப்பதாகும்.
2 ''கல்வி'' மதப்பிரசாரத்துக்குப் பயன் பட்டதாகும்
3 தாய் மொழி மூலக் கல்வி புகட்டப்பட்டதாகும்
4 15 வயதுவரை கட்டாயக் கல்வி புகட்டப்பட்டதாகும்

40 வெளிநாட்டு உதவி நமக்குத் தேவையாயிருப்பதன் பிரதானகாரணம்

1 பல பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதாகும்
2 வரவு செலவுத்திட்டத்தைச் சமப்படுத்தலாகும்
3 உற்பத்திக்கு வேண்டிய மூலதனத்தை உள்நாட்டில் பெறமுடியாமையாகும்
4 வெளிநாட்டு உதவியின்றிஎதையும் செய்யமுடியாதநிலையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினுத்தாள் — 11 | 2. மணி

எல்லாவினுக்களுக்கும் விடைதருக

பின்வரும் விடயங்களைச் சுருக்கமாக ஆராய்க

(1) நமது பிரதேசத்தின் புவியியல் தன்மைகள்

1 நமது நாட்டின் நான்கு இயற்கைப் பிரதேசங்களுமெவை?
2 மலை நாட்டிலுள்ள 3 அதிஉயர்ந்த உச்சிகளையும் அவற்றின் உயரங்களையும் குறிப்பிடுக
3 மலைநாடு அதிகமழை பெறுவதற்கும்வடக்கு கிழக்கு தாழ்நிலங்கள் குறைவான மழை பெறுவதற்கும் காரணமென்ன?
4 வடக்கு கிழக்குதாழ்நிலங்களில் அடர்த்தியான காடுகள்காணப்படாததேன்?
5 யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நீர் முக்கியத்துவம் பெறுவதேன்?

(2) நாகரிகத்தின் பிறப்பிடங்கள்

1 யூபிறற்றிஸ் தைகிறிஸ் பள்ளத்தாக்கு மக்களின் உணவு
2 எகிப்தியரின் உடை
3 இந்துநதிப்பள்ளத்தாக்கு மக்களின் உறையுள்
4 சீனரின் கலைகளும் விஞ்ஞான அறிவும்

(3) இந்தியா

1 ஆரியர்கள் இடம் பெயர்ந்தமைக்கு 4 காரணங்களைக்குறிப்பிடுக
2 அசோகன் பௌத்தமதத்தைத் தழுவியதேன்?
3 அம்மதத்தைப் பரப்ப அவன்எடுத்த 3 நடவடிக்கைகள் எவை?
4 சமுத்திரகுப்தனின் காலத்தை "இந்திய வரலாற்றின் பொற்காலம்" எனக் குறிப்பிடுவதற்கு 2 காரணங்கள் தருக

(4) 2 ம் இராசசிங்கன்

1 ஒல்லாந்தருடன் இவன் 1638ல் செய்துகொண்ட உடன்படிக்கை
2 அவ்வுடன்படிக்கையை ஒல்லாந்தர் மீறியதற்குக் காரணங்கள்
3 அதன் விளைவுகள்
4 2 ம் இராசசிங்கனைப்பற்றி ஒல்லாந்தரும் கண்டிய மக்களும் கொண்டிருந்த கருத்துக்கள்
5 அதற்குக் காரணங்கள்

(5) கைத் தொழிலாக்கம்

1 கைத்தொழிலை ஒரிடப்படுத்தும் காரணிகள் எவை?
2 இலங்கையின் கைத்தொழிலொன்றை எடுத்து அதன் அமைவுக்கு உதவியுள்ள 4 காரணிகளை விளக்குக
3 யப்பான் கைத்தொழில்துறையில் முன்னேற உதவிய 5 காரணிகள் யாவை?
4 கைத்தொழிலாக்கத்தினுல் ஏற்படும் 3 நன்மை தீமைகளைக்கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) 1 19 ம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் குடியேற்றம் ஏற்பட உதவிய 2 காரணிகளைக் குறிப்பிடுக

2 ஐரோப்பிய ஆதிக்கத்தின் 4 அம்சங்களைக் கூறுக

3 19 ம் நூற்றாண்டில் இங்கிலாந்து குடியேற்றப் போட்டியில் முன்னணியில் நிற்க உதவிய காரணிகள் எவை?

4 குடியேற்றச்சுரண்டல் நிகழ்வதற்கு 3 காரணங்களைக்குறிப்பிடுக

(ii) 1 இலங்கையின் 1971 ம் ஆண்டுக் குடித்தொகை யாது?

2 அதில் 14 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் தொகை யாது?

3 அத்தொகை கல்வித்துறையில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?

4 1946 க்குப் பின்னர் இலங்கையின் குடித்தொகை அதிகரித்தக்கு 3 காரணங்கள் குறிப்பிடுக

5 சனத்தொகை பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கும் 3 வழிகளைக் குறிப்பிடுக

iv அ 1 வெளிநாட்டு நாணயமாற்றுக் குறைவதனால் ஏற்படும் 2 பிரச்சனைகள் யாவை?

2 "ஸ்ரேலிங்" நாணயம் "வலுவுள்ளதாகவும்" எமது ரூபா வலுவற்றதாகவுமிருப்பதற்கு காரணம் யாது?

3 இலங்கையில் வெளிநாட்டுநாணயமாற்று நெருக்கடி உண்டாயதேன்?

4 அதைத்தீர்ப்பதற்கு 4 வழிகள் கூறுக.

(ஆ) 1 ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தொழில் சம்பந்தமான நோக்கங்கள் எவை?

2 இலங்கையின் கைத்தொழில் விருத்திக்கு உதவிவரும் 4 நிறுவனங்கள் யாவை?

3 பெரும்பாக அபிவிருத்திச் சபைகள் கைத்தொழில் விருத்திக்கு எவ்வாறு உதவுகின்றன?

1 1972 ம் ஆண்டுக்கல்வித் திட்டத்தின் அடிப்படைநோக்கங்கள் யாவை?

2 அதற்கும் பழைய கல்வித்திட்டத்துக்குமிடையுள்ள 2 வேறுபாடுகளைக் கூறுக.

3 கல்வித்திட்டம் நாட்டின் அபிவிருத்தியைஎவ்வாறுபாதிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினுத்தாள் - 1  1 மணி

(1) 16 ம் நூற்ருண்டில் இலங்கையில் அன்னியர் ஆதிக்கம் ஏற்படுவதற்கு மூலகாரணம்.

1 இலங்கையின் கேந்திரநிலையமாகும்
2 இலங்கையின் வாசனைத் திரவியங்களின் மகிமையாகும்
3 இலங்கையை ஆண்ட அரசர்களிடை ஒற்றுமையின்மையாகும்
4 இலங்கை ஒரு சிறிய தீவாயிருப்பதாகும்

(2) மலைநாட்டுப்பகுதியில் ''நெடுஞ்சாலைகள்'', அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்தியகாரணி

1 போக்வரத்து தேவையாகும்
2 கோப்பிப் பயிர்ச் செய்கையாகும்
3 நாட்டின் பாதுகாப்பு சம்மந்தமான தேவையாகும்
4 1818 கண்டிக்கலகமாகும்

(3) எனது பாடசாலையில் மதிய போசனத்தின் போது ஒரு மானவன் உணவின்றியிருப்பதைக் கண்டால் நான்

1 ஆசிரியரிடம் அவ்விடயத்தைக் கூறுவேன்
2 அம்மாணவனுக்கு வீட்டுக்கு போகுமாறு ஆலோசனை கூறுவேன்
3 எனது உணவில் ஒரு பகுதியைக் கொடுக்க முன்வருவேன்
4 எனது கருமத்தைப்பார்த்துக் கொண்டு போசாமல் இருப்பேன்

(4) வைத்தியசாலையில் ''கியூவில்'' நான் நிற்கும் போது எனக்குப் பின்ஞல் நிற்கும் ஒருநோயாளி அதிகமாக வேதனைப்படுவதைக் கண்டால் நான்.

1 விடயத்தை வைத்தியரின் கவனத்துக்குக் கொண்டுவருவேன்
2 அவரைக்காணுதது போல் நிற்பேன்
3 ''கியூவை'' விட்டு வெளியேறுமாறு ஆலோசனை கூறுவேன்
4 அவருக்கு எனது இடத்தைக் கொடுத்து அவரிடத்தில் நான்நிற்பேன்

(5) வரண்டபிரதேசத்திலுள்ள பழைய குளங்களின் அமைப்பை நோக்கும் போது புலப்படும் உண்மை

1 முன்னர் குள நீர்ப்பாய்ச்சல் முக்கியத்துவமுடையதா யிருந்ததென்பது
2 வரண்டபிரதேசத்தில் முற்காலத்திலும் மழைகுறைவாயிருந்த என்பது
3 குள நிர்மாணத்தில் எமது முன்ஞேர் மிகத் திறமைபெற்றிருந்தார்கள் என்பது
4 குளங்களை மையமாகக்கொண்டே குடியிருப்புகள் ஏற்பட்டன என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) வளிமண்டலத்தைக் கொண்டிருக்கும் ஒரு கோள்
i வியாளன் ii புதன் iii சனி iv செவ்வாய்

(7) இலங்கையில் சோழராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவன்
(i) துட்டகாமினி (ii) மகாபராக்கிரமபாகு
(iii) 1 ம் விஜயபாகு (iv) நிசங்கமல்லன்

(8) இலங்கையில் அச்சுயந்திரத்தை அறிமுகம் படுத்தியது
i போத்துக்கீசர் ii ஒல்லாந்தர் iii ஆங்கிலேயர் iv பறங்கியர்

9) "பாலூட்டிகளின் யுகம்" என வர்ணிக்கப்படும் காலம்
i பலியோசோயிக் ii மெசோசோயிக் iii சேனசோயிக் iv நியோலிதிக்

(10) ஆதிமனிதனின் கலை ஆக்கங்களிலிருந்து நாம் எடுக்கக் கூடிய முடிவு
1 ஆதிமனிதன் தனது ஓய்வுநேரங்களில் தனது சூழலைப்பற்றிச் சிந்தித்திருக்கிறான்
2 அவன் கலைகளை விருத்தி செய்யும் நோக்குடனிருந்தான்
3 அவன் தான் தினசரி கண்ட காட்சிகளைச் சித்தரிப்பதில் ஈடுபட்டான்
4 அவனது கலைத்திறமை குறைவாயிருந்தது

(11) எகிப்திய அரசர் பிரமிட்டுகளைக் கட்டியதன் நோக்கம்
1 தமது பெருமையை ஏனையோர் அறியச் செய்வதாகும்
2 தமது கட்டிடகலைத்திறமையைமற்றவர்களுக்குக் காட்டுவதாகும்
3 தாம் இறந்த பின் தமது சடலங்களைப் பேணுவதாகும்
4 தமது பிரசைகள் தம்மை மதிக்கச் செய்வதாகும்

(12) பண்டைக்கால உயிரினங்கள் அழிந்தமைக்கு காரணம்
1 புவியின் பௌதிகச்சூழல் மாற்றமடைந்தமையாகும்
2 புதிய உயிரினங்கள் தோன்றியமையாகும்
3 மாறுபடும் சூழலுக்கேற்ப அவை தம்மை இயைபு படுத்தாமையாகும்
4 புவியில் அடிக்கடி இயற்கை அழிவுகள் ஏற்பட்டமையாகும்

(13) ஆதிமனிதனின் வளர்ச்சியை ஆராயும் போது புலப்படும் உண்மை
1 சூழலுக்கேற்ப வாழ்ந்தமையால் வளர்ச்சி ஏற்பட்டது
2 படிமுறையில் வளர்ச்சி ஏற்பட்டது
3 சிந்தனை சக்தியால் வளர்ச்சி யேற்பட்டிருக்கிறது
4 உடலமைப்பு மாற்றங்களினாலும் சிந்தனைசக்தி மூலமும் வளர்ச்சி ஏற்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14) வருடத்தை 12 மாதங்களாகவும் 365 தினங்களாகவும் பிரித்துக் கலண்டர் முறையைத் தொடக்கியவர்கள்

i சீனர் ii இந்தியர் iii எகிப்தியர் iv சுமேரியர்

(15) கனிஷ்டமன்னனின் ஆட்சியில் குறிப்பிடத்தக்க அம்சம்

1 புத்தசமயத்தின் வளர்ச்சியாகும்
2 புத்தசமயத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டமையாகும்
3 "மஹாயானம்" என்ற புதிய பிரிவு தோன்றியமையாகும்
4 புத்தசமயத்தின் செல்வாக்கு ஐரோப்பாவில் பரவியதாகும்

(16) கி.பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற இந்திய வானியல் நிபுணர்

i சாணக்கியர் ii காளிதாசர் iii ஆரியபட்டர் iv கௌடில்யர்

(1 ) சீதவாக்கை அரசு போத்துக்கீசர் வசமாக உதவிய காரணி

1 1ம் இராஜசிங்கனின் மரணமாகும்
2 மத்தும பண்டாராவின் மரணமாகும்
3 இராஜசிங்கனுக்குப் பின் ஆண்டவர்களின் பலவீனமாகும்
4 போத்துக்கீசரின் படைப்பலமாகும்

(18) போத்துக்கீசரின் ஆட்சி இலங்கையில் முடிவடைய உதவிய காரணி

1 அவர்களின் கொடுமையான ஆட்சியாகும்
2 அவர்கள் தமது வர்த்தக நலன்களை மட்டும் கவனித்தமையாகும்
3 அவர்கள் உள்நாட்டுபோர்களில் அடிக்கடி ஈடுபட்டமையாகும்
4 கண்டியரசர்கள் ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றமையாகும்

(19) 1818 ம் ஆண்டு கண்டிகலகம்

1 ஆங்கிலேயரின் ஆட்சியைப் பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்
2 கண்டிய மக்கள் தம் சுதந்திரத்தை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியாகும்
3 பிரதானிகளின் சூழ்ச்சியினால் ஏற்பட்ட கலகமாகும்
4 பிரித்தானியருக்கெதிராக ஒல்லாந்தர் மேற்கொண்ட சதியாகும்

(20) "இவ்வுலகிலே இறைவனால் படைக்கப்பட்ட எழில் பொருந்திய நாடு" என இலங்கையை வர்ணித்தவர்

(1) குவேரோஸ் (2) ருபேரு
(3) ரொபேட்நொக்ஸ் (4) பேரோலோப்ஸ்

(21) சமநிறைபற்ற பொருட்களைக் கீழே போடும் போது பாரமான பொருள் முதலில் விழும் எனக்கூறியவர்

i கலிலியோ ii கோபர்நிக்கஸ் iii டார்வின் iv கெப்ளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(22) பிரித்தானியர் உணவுப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்காமல் தோட்டப்பயிர்களில் கவனம் செலுத்தியதற்குப் பிரதானகாரணம்

1 மக்கள் தோட்டப்பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டியமை
2 உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து மலிவாகப் பெறக் கூடியதாயிருந்தமை
3 தோட்டப்பயிர் உற்பத்திப் பொருட்கள் அதிகலாபத்தை ஈட்டிக் கொடுத்தமை
4 இலங்கையில் பெருந்தோட்டங்களுக்கேற்ற புவியியல் நிலைமைகள் காணப்பட்டமை

(23) இலங்கையின் அரசியல் விடுதலை இயக்கத்திற்கு முன்னோடியாக விளங்கியது

i மதுவிலக்கு இயக்கம் ii இலங்கைத்தேசியகாங்கிரஸ்
iii பௌத்தபிரமஞானசங்கம் iv இலங்கைசீர்திருத்தகுழு

(24) உள்ளூராட்சிகளின் தந்தை எனப் போற்றப்படுபவர்

i W. தகநாயக்கா ii C.W.W கன்னங்கரா
iii D.S. சேனநாயக்கா iv S.W.R.D. பண்டாரநாயக்கா

(25) "ஞானதீபம்" என்ற பத்திரிகை மூலம் மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்

1 ஆறுமுகநாவலர் 2 சித்திலெப்பை
3 அநகாரிகதர்மபால 4 சுமங்கலதேரோ

(26) மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சி இயக்கத்துக்கு மூலகாரணமாயமைந்த நிகழ்ச்சி

1 மானிய முறையின் வீழ்ச்சியாகும்
2 1453 இல் துருக்கியர் கொன்ஸ்தாந்திநோப்பிளைக் கைப்பற்றியதாகும்
3 கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாகும்
4 நகர்ப்புறச் சமுதாயம் ஒன்று உருவாகியதாகும்

(27) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்கான அத்திவாரமிட்டவன்

1 டி. அசிவிடோ 2 டீசா
3 வான் கோயன்ஸ் 4 டியாகோடிமெலோ

(28) 20ம் நூற்றாண்டில் ஆபிரிக்காவில் அதிகமான குடியேற்றங்களை உடையதாயிருந்த நாடு

i போத்துக்கல் ii ஸ்பெயின் iii பிரித்தானியா iv பிரான்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(29) இறக்குமதிப் பிரதியீடு செய்தல் என்பதன் பொருள்

1 இறக்குமதியைக் குறைத்தலாகும்
2 இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டில் வேறு பொருட்களை உற்பத்திசெய்தலாகும்
3 இறக்குமதியளவுக்கு ஏற்றுமதியைக் கூட்டுதலாகும்
4 இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியைக் கூட்டுதலாகும்

(30) கூட்டுறவு முறையின் பிரதான நோக்கம்

1 ஏழைகளுக்கு உதவுவதாகும்
2 பொருட்களை மலிவாக விநியோகித்தலாகும்
3 இலாபநட்டங்களை அங்கத்தவர்களிடையே பங்கிடுவதாகும்
4 நுகர்பவர்களுக்கு நிவாரணமளிப்பதாகும்

(31) முதலாளித்துவ பொருளாதார முறையின்கீழ், பொருட்களின் வழங்கல் கேள்வியிலும் அதிகரிக்கும் போது

1 கேள்வி குறையும்
2 விலைகுறையும்
3 நுகர்ச்சி குறையும்
4 விலையில் எவ்வித மாற்றமுமிருக்காது

(32) சமநிலை விலை என்பது

1 கொள்விலைக்கும் விற்ற விலைக்குமிடையுள்ளது
2 கேள்விக்கும் வழங்கலுக்கு மிடையுள்ளது
3 வழங்கலுக்கும் நுகர்ச்சிக்கு மிடையுள்ளது
4 கேள்விக்கும் விற்றவிலைக்கு மிடையிலானது

(33) உலகின் முழு நிலப்பரப்பில்பயிரிட ஏற்றநிலத்தினளவு

i 0.9 சதவீதம் ii 21.1 சதவீதம் iii 10 சத வீதம் iv 20 சதவீதம்

(34) சுங்கவரியற்ற வர்த்தகக் கூட்டமைப்புக்கு உதாரணம்

1 பொதுநலவாயம் 2 ஐரோப்பிய பொதுச்சந்தை
3 உங்ராட் 4 காத்

(35) இலங்கைக்கு இன்று அதிக வெளிநாட்டுச் செலவாணி சட்டித்தரும் கனிப்பொருள்

i காரீயம் ii இரத்தினக்கல் iii இல்மனைற் iv இரும்பு

(36) இலங்கையில் 10 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தையுடையவர்களின் தொகை முழுக் குடித்தொகையில்

i 11 சதவீதம் ii 4 சதவீதம் iii 10 சதவீதம் iv 19 சதவீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(37) இலங்கையில் தென்மேல் பிரதேசத்தில் கைத்தொழில்கள் அதிகமாககாணப்படுவதிலிருந்து நாம்வரக் கூடிய முடிவு

1 ஏனையபகுதிகளில் கைத்தொழில்களை விருத்தி செய்யமுடியாது
2 தென்மேல் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை குறைவாயுள்ளது
3 தென்மேல் பிரதேசத்தில் மூலப்பொருள், வலு, முதலியன கிடைக்கின்றன
4 தென்மேல் பிரதேசத்தை விருத்திசெய்வதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துகிறது

(38) இலங்கையரின் வருடாந்த வருமானம் (டொலரில்)

i 100 ii 180 iii 160 iv 120

(39) "பணவீக்கம்" ஏற்படும் போது

1 பணம் தட்டுப்பாடாயிருக்கும்
2 பொருட்கள் மலிவாகக் கிடைக்கும்
3 பொருட்களின் விலை அதிகரிக்கும்
4 பணத்தின் மதிப்பு அதிகரிக்கும்

(40) "மார்ஷல்" திட்டம் எனப்படுவது

1 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான ஐ. நா உதவித் திட்டமாகும்
2 இரசியாவினால் உருவாக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய புனரமைப்புத் திட்டமாகும்
3 2ம் உலகப் போரில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களுக்கான உதவித்திட்டமாகும்
4 மேற்கு ஐரோப்பாவின் புனரமைப்புக்காக அமெரிக்காவின் உதவித்திட்டமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத்தாள் 2. 2 மணி

(I) பின்வரும் விடயங்களைச் சுருக்கமாக ஆராய்க

உயிரின் பிறப்பு

1 முதல் உயிரினங்களுக்கு 3 உதாரணங்கள் தருக
2 உயிர்ச்சுவடுகள் என்றால் யாவை?
3 கேம்பிரியன்காலத்து உயிரினங்களின் உயிர்ச்சுவடுகள் காணப் படாததேன்?
4 மெசோசோயிக் யுகத்தில் முதன்மைவகித்த உயிரினம் எது?
5 அது அழிந்தொழிந்தமைக்கு 3 காரணங்கள் கூறுக

2 நாகரிகத்தின் பிறப்பிடங்கள்

1 இந்து நதிப்பள்ளத்தாக்கு மக்களின் உறையுள்
2 நைல்நதிப்பள்ளத்தாக்கு மக்களின் கலைகளும் விஞ்ஞான அறிவும்
3 யூபிறதீஸ் தைகிரிஸ் பள்ளத்தாக்கு மக்களுன் எழுத்துக்கலை
4 ஹோயாங்கோ நதிப்பள்ளத்தாக்கு மக்களின் உடை

3 S W R.D பண்டாரநாயக்கா

1 நாட்டிற்கு ஆற்றிய சேவைகள்
2 1952 க்குப் பின் இவர் அரசியல் கருத்துக்கள்
3 ''இலங்கையில் புதுயுகம் ஒன்றை இவர் உருவாக்கிய வர்'' என்ற கூற்றுக்கு 3 அடிப்படைக்காரணங்கள்

4 பயிர்ச் செய்கை அன்றும் இன்றும்

1 மண்பாதுகாப்பு
2 உபகரணங்கள்
3 பயிர்பாதுகாப்பு

5 முதலாளித்துவமும் சமதர்மமும்

1 காணப்படும் 3 நாடுகள்
2 பொருளுற்பத்தி முறை வேறுபாடுகள்
3 நிறை குறைகள்
4 இலங்கையில் சமதர்ம முறையை ஏற்படுத்தஎடுக்கப் பட்ட முக்கியமான 4 நடவடிக்கைகள்

(ii) 1 முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் பணம் எவ்வழிகளில் தொடர்புகளை ஏற்படுத்துகிறது?
2 பணவீக்கம் என்றால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 அது ஏன் ஏற்படுகிறது?

4 அதை எவ்வாறு அறியலாம்

5 அதைத்தீர்க்கும் 2 வழிகள் யாவை?

(iii) 1 "வங்கிமுறை" எவ்வாறு தொடங்கியது?

2 இலங்கையிலுள்ள 3 வர்த்தகவங்கிகளைக் குறிப்பிடுக

3 வர்த்தக வங்கிகள் வழங்கும் 6 சேவைகள் யாவை?

4 "தீர்ந்துக்கட்டுதல்" என்பதை விளக்குக

5 வங்கிமுறையால் ஏற்படும் 3 நன்மைகளைக் குறிப்பிடுக

iv அ 1 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இலட்சணங்களைக் குறிப்பிடுக

2 அந்நாடுகளில் கைத்தொழிலாக்கம் அவசியமாகக்கருதப்படுவதேன்?

3 அவைகைத்தொழில் மயமாவதில் உள்ள 4 பிரச்சனைகளைக் குறிப்பிடுக

4 அப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு 3 வழிவகைகளைக் கூறுக

ஆ 1 "தொழில்முறையியல்" என்பதுயாது?

2 அது எத்துறைகளில் செல்வாக்குச்செலுத்துகிறது?

3 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொழில்முறையியலில் பின்தங்கியதற்குக் காரணங்களெவை ?

4 தொழில் முறையியலின் வளர்ச்சியினால் ஏற்பட்ட 4 தீமைகள் எவை?

5 அவற்றைத் தவிர்க்கும் வழிவகை யாவை?

v 1 மனப்பாங்குகளையும் விழுமியங்களையும் வேறுபடுத்துக

2 சமுதாய வளர்ச்சிக்குச் சாதகமான 3 மனப்பாங்குகளையும் பாதகமான 3 மனப்பாங்குகளையும் குறிப்பிடுக

3 இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பாதகமான 3 மனப்பாங்குகளை கூறுக

4 நல்ல மனப்பாங்குகளை விருத்தி செய்வதெவ்வாறு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிலிருத்தற் கேற்றவை

1 ஞாயிற்றுத் தொகுதியில் புவியில் மட்டும் நீர் உள்ளது:
2 இலங்கைக்கு 6 ம் நூற்றுண்டில் வந்த சீன யாத்திரிகன் பாகியன்
3 கிராமங்களில் ஏற்படும் சிறுபுணக்குகளைத்தீர்ப்பது இணக்கசபை
4 சந்திரனில் ஒருநாள் புவியில் 28 நாட்களாகும்;
5 பண்டைக்காலத்தில் கிராமங்கள் தன்னிறைவுபெற்றிருந்தன.
6 தென்மேல் பருவக்காற்று மே–செப்டம்பரில் வீசும்

## ஏழாந்தரம்

1 நாட்டார்கதைகளின்படி முதலில் தோன்றியது நீரண்டமாகும்
2 உலகம் உருண்டையானதென முதலில் கூறியவர் பைதகறஸ்
3 வளிமண்டலத்தின்தடிப்பம் ஏறக்குறைய 200 மைல்
4 வளியின் பாரம் ஒரு கனஅடிக்கு 1¼ அவுன்சாகும்
5 புவியின் மேற்பரப்பு நிலப்பரப்பு 10)3 ஆகும்
6 புவியோட்டின் சராசரித் தடிப்பம் 20மைலாகும்
7 புவிநடுக்கம் காட்டும்உண்மைபுவியின்உட்பகுதிகூழ்ப்பதமானது;
8 பலியோசோயிக் என்ருல் முதல் உயிரினங்கள் எனபது பொருள்
9 வளியில் ஒட்சிசன் 5)1 ஆகும்
10 இன்றைய மனிதஇனம் தோன்றியது ''ஹோமோசம் பியன் பிரிவிலிருந்து
11 ஹோமோசப்பியனின் பிரிவுகள் நீகிரோயிட், கோகசோயிட், மொங்கலோயிட் என்பனவாம்
12 ஹோமோசப்பியன்சின் முதல்மனிதன் தோன்றி 35000ஆண்டுகளாகும்
13 இலங்கையில் ஆதிமனிதர் உபயோகித்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்ட 3இடங்கள்– உடுப்பியன்குகை, அலுக்கல்குகை படதொட்டகுகை
14 புதியகுடியிருப்பு ஒன்றைத்தெரிவு செய்யும்போது கவனிக்க வேண்டிய பிரதானஅமிசம் நீர்வசதி
15 எகிப்திலுள்ள மிகப்பிரமாண்டமான பிரமிட்டைக்கட்டியவன் குபுபேரா
16 சட்டத்தொகுதியை உருவாக்கிய பபிலோனிய அரசன் ஹம்முரபி
17 நிலத்துக்கடியில் வீடுகட்டிவாழ்ந்தவர்கள்– சீனர்
18 ''ஹயரோகிளிபிக்ஸ்'' என்பது எகிப்தியரின் சித்திரவடிவான எழுத்துக்களாகும்
19 பப்பிரஸ் தாளில் எழுதியவர்கள் எகிப்தியர்
20 ஸ்பிங்ஸ் என்பது எகிப்திய விக்கிரகங்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 1 வருடத்தை 3 6 0 தினங்களாகவும் 1 மாதத்தை 30 தினங்களாகவும் 1 தினத்தை 12 மணித்தியாலங்களாகவும் பிரித்தவர்கள் சுமேரியர்

22 கிரேக்க கட்டிடங்களில் சிறந்தது "பார்த்தினன்" மாளிகை

24 1 வருடத்தை 365¼ நாட்களாகப்பிரித்தவர்கள் கிரேக்கர்

25 மேலைத்தேச வைத்தியத்தின் பிதா -ஹிப்போகிறிற்றஸ்

26 ஒகஸ்தஸ் சீசர்காலத்தில் இயேசுகிறீஸ்து அவதரித்தார்

27 கிறிஸ்தவமதத்தைத் தழுவி அதை ரோமஅரசின் மதமாக்கியவன் கொன்ஸ்தன்ரைன்

28 இயேசு நாதரைச் சிலுவையில் அறைவித்தவன் பொன்ரியஸ் பைலேற்

29 உரோமாபுரியில் முதன் முதல் கிறிஸ்தவமதத்தைப் போதித்தவர் பவுல் (சின்னப்பர்)

30 கடல்கடந்து சோழஆட்சியை நிலைநாட்டியவன் இராசேந்திர சோழன்

31 இந்தியாவிலுள்ள புத்தர்சிலைகளில் சாரநாத்சிலை தலைசிறந்தது

32 ஆயுர்வேதமுறையைஉலகிற்கு அறிமுகம்செய்தவர்கள் இந்தியர்

33 சிறந்தசுவரோவியங்கள் இந்தியாவில் காணப்படுமிடம் அஜந்தா

34 1 முதல் 9 வரையான எண்களையும் சைபரையும் பயன்படுத்தியவர்கள் இந்தியர்

35 சமண சமயத்தைப் போதித்தவர் மகாவீரர்

36 முகமதுநபி மக்காவிலிருந்து மெதினாவுக்குஓடியது கி பி 622 ல்

37 முகமதுநபிக்குப்பின் முஸ்லிம்தலைவராகியவர் காலிப் அபூபக்கர் ஆகும்

38 "செரண்டிப்" என இலங்கையை அழைத்தவர்கள் -அராபியர்

39 புலனுக்கு வெப்பநிலை என்பது 98.4oF ஆகும்

40 யாழ்ப்பாண அரசைநிறுவியவன் ஆரியச்சக்கரவத்தி

24 இலங்கையின் சனத்தொகையில் பௌத்தர் 66.3% ஆகும்

14 புத்தர் பரிநிர்வாணமடைந்தது கி.மு 543 இல்

43 "திரிபிடகம்" எழுதப்பட்டதும் புத்தசமயத்தில் பிளவு ஏற்பட்டதும் வலகம்பா காலத்திலாகும்

44 இலங்கையில் பௌத்தம் நிலைபெறுதற்காகத் தூபாரமையில் முதன் முதல் போதனை செய்தவர் அரிட்டர்

44 "அபயகிரி" விகாரையை மகாவிகாரைக்குப் போட்டியாக நிறுவியவன் வலகம்பா

46 பிசோ கொட்டுவ என்பது நீரின்வேகத்தையும் அளவையும் கட்டுப்படுத்துவதற்காக மதகுக்கருகில் நிறுவப்பட்ட ஒரு அமைப்பாகும்

47 கலிங்கு என்பது நீர் மிகுதியான காலங்களில் மேலதிக நீரை வெளியேற்றும் வடிகாலாகும்

48 "கம்லத்தன்" என்பது அரசசேவைக்காக நிலத்தைப் பெற்றவரின் பெயராகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49 இலங்கையில் 5 பல அங்கத்தவர்கள் தொகுதிகள் உள்ளன
50 மக்கள்வங்கி நீதி இணைக்களத்தின் கீழுள்ளது
51 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் (ஆள்வீத) வருமானம் 1972 இல் 200 டாலராகும்
52 இலங்கையின் குடியடர்த்தி 1 சதுரமைலுக்கு 508 பேராகும்
53 இலங்கையில் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் கீழ்உள்ள நிலம் 24 இலட்சம் ஏக்கர்
54 டார்வின் எழுதியநூல் உயிர்களின்பிறப்பு என்பதாகும்
55 புவியில் மனிதனின் வளர்ச்சி 50, 000 ஆண்டுகளுக்குட்பட்டது
56 நவீன மனிதனுக்கு நெருங்கியஇனம் ஹோமோஇரெக்டஸ் ஹோமோசப்பியன் வர்க்கத்தில் முதல்மனிதனும் குரோமக்னன் மனிதனாகும்
57 ஆதிமனிதனின் கண்டுபிடிப்புக்களில் முக்கியமானது நெருப்பு
58 வீடொன்றைக் கட்டும் போது கவனிக்க வேண்டியன நீர்வசதி' மண்வளம், காலநிலைவசதி
59 அராபியாவின் ஆதிகுடிமக்கள் பத்விகள் என அழைக்கப்பட்டனர்
60 ஹிஜரா என்பது முகமதுநபி மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஓடிய நிகழ்ச்சியாகும்
61 அரபு மொழியிலுள்ள சிறந்தமதநூல் குர்ஆன்
62 அரபு மொழியிலுள்ள ரிகச்சுவையானநூல் ''ஆயிரத்தொரு இரவுகள்
63 உமர் கயாம் ஒரு பாரசீக் கவிபுர்
64 அவர் இயற்றிய கவிதை நூல் ''ருபய்யாத்''
65 இலங்கையைப் போர்த்துக்கீசர் ''சயிலோ'' என்றும் ஒல்லாந்தர் ''சிலன்'' என்றும் அழைத்தனர்
66 ''தப்பபண்ணி'' என்ற பெயர்வரக்காரணம், சிவந்தமண் கைகளில் ஒட்டியமையாகும்
67 இலங்கையின் ஆதிமனிதன் (பலாங்கொடை மனிதன் புதிய கற்காலத்தில் வாழ்ந்திருக்கலாம்
68 இலங்கை வேடர்கள் ''கற்கால'' மக்களைப் போன்று வாழ்க்கையினையுடையவர்கள்
69 இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிககால எழுத்துக்களின் பொருள் இதுவரை அறியப்படவில்லை
70 இலங்கையின் நீதிநிர்வாகப் பிரிவுகள் — 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாந்தரம்

1 முதன் முதல் உலகச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டவன் மகேலன்

2 கோபர்நிக்கஸ் போலந்து நாட்டவர்

3 கலிலியோ என்ற இத்தாலியர்கோள்களைப் பற்றிவிரிவாக ஆராய்ந்ததேபடு புவி சூரியனைச்சுற்றுவதையும் நிரூபித்தார்

4 "மொனுலிசா', வேர்ஜின் ஒப்தரொக்ஸ் என்ற ஓவியங்களை வரைந்தவர் டாவின்சி

5 முதன்முதல் புவியின் தேசப்படத்தை கீறியவர் டொலமியாகும்

6 கடற்பிரயாணங்களுக்கான தேசப்படத்தை முதன் முதல் கீறியவர் மேக்கேற்றர்

7 கோட்டை இராச்சியம் போத்துக்கீசர் வசமாகியது 1597ல்

8 இலங்கைக்கு முதன்முதல் வந்தபோத்துக்கீசர் லொறென்சா டி அல்மேடா

6 போத்துக்கீசர் வந்தபோது கோட்டையை ஆண்டவன் 8ம் வீரபராக்கிரமபாகு

10 மேற்கிந்திய தீவுகள் என்ற பெயர்வரக்காரணம், கொலம்பஸ் அவை இந்தியாவின் பகுதிகள் என்று எண்ணியமையாகும்

11 புவி நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றிவருகின்ற தென்ற உண்மையைக் கண்டறிந்தவர் கெப்ளர்

12 "டொலமி" எழுதிய நூல் ஜியோகிரபியா

13 1521 இல் கோட்டை இராச்சியம் 3 பிரிவுகளானதிற்கு "விஜயபாகு கொள்ளை" காரணமாகும்

14 போத்துக்கீசர் தமக்கெதிரான கலகங்களை அடக்குவதற்குநிலநாசக்கொள்கை (பயிர்நிலங்களை அழித்தல்)யைப் பின்பற்றினர்

15 யூலியஸ் சீசருடனும் அலெக்சாந்தருடனும் ஒப்பிடப்பட்ட வீரன் 1ம் இராசசிங்கன்

16 1ம் விமலதர்மசூரியனின் மறு பெயர்கள் டொன்யுவான் கொன்னப்பு பண்டாரன்

17 "இலங்கையின் அரசியல் ஆன்மவியல் சரித வெற்றி" என்ற நூலைஎழுதியவர்டிகுவேறோஸ் என்றபோத்துக்கீசப் பாதிரியார்

18 "இலங்கையின் வரலாற்றுத் துன்பியல் என்ற நூலை எழுதியவர்ஜுவாமி ஆபேரு

19 "இலங்கையின் வரலாற்றுக்கதை" என்ற நூலை எழுதியவர் றொபேட் நொக்ஸ்

20 ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியது 1796 இல்

21 ஆங்கிலேயர் கண்டியைக்கைப்பற்றியது 1815 இல்

22 "உடன் படிக்கையில் கைச்சாத்திடும்வரை இக்கொடியை உயர்த்த இடமளிக்கமாட்டேன்" எனக்கூறியவர் வாரியப்பொல சுமங்கலபிக்கு (1815) இல்

23 1848ம் ஆண்டு மாத்தளைக் கலகத்தின் நோக்கம் புதிய ஆட்சி முறையை அமைப்பதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 1870ம் ஆண்டளவில் கோப்பிச் செய்கைவீழ்ச்சியுறக் காரணம் "ஹெமீலியா வெஸ்ட்ரட்றிக்ஸ்" என்னும்பயிர் நோயாகும்

25 'நீர்ப்பாய்ச்சல்' வேலைகளில் ஆகக்கூடிய ஆர்வம்காட்டியவர் வில்லியம் கிறகரி

26 நீர்ப்பாய்ச்சல் திணைக்களத்தை நிறுவியவர் சேர் வெஸ்ட் றிட்ஜ்வே

27 'தேவமித்த' என அழைக்கப்பட்டவர் அநகாரிகதர்மபால

28 'தேசத்தொண்டன்' எனப் போற்றப்பட்டவர் F.R சேனநாயக்கா

29 'கோட்டைச்சிங்கம்' எனப்பெயர்பெற்றவர் E.W பெரேரா

30 றொடீசியா நாட்டை உருவாக்கியவர் சிசில் றோட்ஸ்

31 பேருநாட்டில் நிலவியது இன்கா நாகரிகம்

32 மத்திய அமெரிக்காவில் நிலவியது மாயா நாகரிகம்

33 ஆபிரிக்காவில் அடிமை வியாபாரத்தைத் தொடங்கியவர்கள் போத்துக்கீசர்

34 19 ம் 20ம் நூற்றாண்டுகளில் ஆபிரிக்காவில் அதிககுடியேற்றங்களை வைத்திருந்தது பிரான்ஸ்

35 இதுவரை நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் 95

36 இலங்கையில் வேலையற்றோர்தொகை அதிகமாயிருப்பது 15–24 வயதுபிரிவிலாகும்

37 எஸ்கிமோவர்வாழும் வீடுகளுக்கு இக்ளு என்பது பெயராகும்

38 17ம் 18 ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் வர்த்தகத்தில் மேம்பட்டிருந்தது வெனிஸ்நகர்

39 1 பரிவலு 20 ஆள்வலுவுக்குச் சமமாகும்

40 யூறேனியம், தோரியம் என்னுமிரண்டும் கதிரியக்கக் கனிப்பொருட்களாகும்

41 இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய நீர்மின்னின் அளவு 10 இலட்சம் கில்லோவாற்

42 'அம்மைப்பால் ஏற்றும்முறையைக் கண்டுபிடித்தவர் எட்வேட் ஜெனர்

43 இளம்பிள்ளைவாதத்தடுப்புமருந்தைக் கண்டுபிடித்தவர் சோல்க்

44 தொலைபேசியைக்கண்டு பிடித்தவர் கிறஹம் பெல்

45 ராடார் கருவியை அமைத்தவர் வொட்சன் வொட் ஆகும்

46 உலகில் ஏறக்குறைய 55 நாடுகளில் பெற்றோலியம் காணப்படுகிறது

47 உலகில் அதிகமான நீர்மின்வளங் கொண்ட கண்டம் ஆபிரிக்கா

48 இலங்கையில் 55 நீர் வீழ்ச்சிகள் உள்ளன

49 மனித இருதயத்தைப் பெயர்த்துப் பொருத்திச் சாதனைநாட்டியவர் கிறிஸ்டியன் போர்னட் என்ற ஆபிரிக்க மருத்துவர்

50 கம்பியில்லாத் தந்தியைக்கண்டுபிடித்தவர் மார்க்கோனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51 புதிய உலகில் (அமெரிக்கா) குதிரைகளை அறிமுகப்படுத்தியவர்கள் ஸ்பானியர்

52 நீராவிக் கப்பலை நிர்மாணித்தவர் ஜொஃப்ரோய்

53 மோட்டார் என்ஜினை நிர்மாணித்தவர் ஓட்டோ என்ற ஜெர்மனியர்

54 முதன் முதல் மனிதனைச் சுமந்து சென்றது வொஸ்ரொக் என்ற இரசிய விண்வெளிக்கப்பல்

55 நமது நாட்டிலுள்ள பிரதேசக்கல்வித் திணைக்களங்கள் –10

56 ஆங்கிலப்புரட்சி நடந்த ஆண்டு 1688 அதற்கு அடிகோலிய தத்துவ ஆசிரியர் லொக்

57 ஐக்கிய அமெரிக்காவில் முதல் சனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன்

58 ஐக்கிய அமெரிக்காவில் அடிமைமுறையை ஒழித்தவர் ஆபிரஹாம் லிங்கன்

59 சமூக ஒப்பந்தம் என்றநூலை வெளியிட்டவர் பிரான்சிய தத்துவஞானி ரூஸோ

60 சீனாவில் குவோமிந்தாங் என்ற தேசிய விடுதலை இயக்கத்தைத் தொடக்கியவர் சுன்யாற் சென்

61 சீனாவில் பொதுவுடைமை ஆட்சி ஆரம்பித்தது 1949 இல்

62 ஆபிரிக்காவில் இன்றுள்ள பிரெஞ்சுக்குடியேற்றம் சோமாலிலாந்து

63 ஆபிரிக்காவில் வெள்ளையாட்சிநடைபெறும்நாடுகள் ரொடீசியா தென்னாபிரிக்கா என்பனவையாம்

64 ஆபிரிக்கா பங்கிடப் பட்டது 18 ம் நூற்றாண்டிலாகும்

65 முதலாம் உலகப்போரின்பின் உலகஅமைதியைநிலைநாட்ட நிறுவப்பட்ட தாபனம் சர்வதேச சங்கம்

66 இன்றுநிலக்கரி காணப்படுமிடங்கள்முன்னர் காடுகளாயிருந்தன

67 பேரரசுவாதம் (ஏகாதிபத்தியவாதம்) என்றால் குடியேற்றங்களை நிறுவி ஆட்சி செய்வதாகும்

68 டொமினியன் அந்தஸ்து (ஆணிலப்பதம்) என்றால் முடிக்கு விசுவாசமுள்ள சுதந்திரம் என்பது பொருளாகும்

69 பொதுநலவாயம் என்பது பிரித்தானியராட்சியினின்று விடுதலை பெற்றநாடுகளையும் இன்னும்சுதந்திரமடையாத நாடுகளையும் அங்கத்தவர்களாகக் கொண்ட ஒருஅமைப்பாகும்

70 பிரித்தானிய பேரரசு 9 ம் நூற்றாண்டில் மறையாது நீடித்தமைக்குக்காரணம் அது காலத்துக்கேற்ற குடியேற்றக் கொள்கைகளைக் கடைப்பிடித்தலாகும்

71 பயிர் காப்புறுதித் திட்டத்தின் நோக்கம் பயிர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்தலாகும்

72 ஐரோப்பிய அரசுகள் தமது குடியேற்றங்களுக்குச் சுதந்திரம் வழங்கிய காரணம் அந்நாடுகளில் உருவாகிய தேசிய உணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ம் தரம்

1 ஐ: நா: தாபனம் 1945 இல் நிறுவப்பட்டது
2 பாதுகாப்புச்சபையில் 15 அங்கத்தவர்கள் உளர். இதில் ஐ: அமெரிக்கா, இரசியா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனு ஆகிய ஐந்தும் நிரந்தர உறுப்பினர்களாம்
3 உற்பத்திகாரணிகளில் (1) மனிதன் (2) பௌதிகச்சூழல் என்பவை பிரதானமானவை
4 பௌதிகச் சூழல் என்பது 1 புவியும் அதன்வளங்களும் 2 சமுத்திரம் 3 வளிமண்டலம் 4 விண்வெளி ஆகியவற்றை உள்ளடக்கும்
5 மூலதனம் என்பது பண்டங்களிலும் சேவைகளிலுமுள்ளடக்கிய பெறுமானமாகும்
6 மூலதனமானது, மூலதனப் பொருள், மூலதனப் பணம் என இருவகைப்படும்
7 ஒரு பொருளின் பல்வேறுபகுதிகளைத் தனித்தனியே செய்து பின் ஒன்றிணைக்கும் முறை தொழிற் பிரிப்பு எனப்படும்
8 கேள்வி வளைகோடு அதிகமாகச்சாய்ந்தால் விலைமாற்றத்துடன் கேள்வியில் அதிகமாற்றம் ஏற்படும் என்பது தெளிவு
9 மூலதனப்பணத்துக்கு வட்டி அறவிடப்படுகிறது
10 உற்பத்திச் செலவுக்கும் விற்பனைக்குமிடையுள்ள வேறுபாடு இலாபம்
11 சமதர்மக் கற்பனைவாதிகளில் றொபேட்ஒவன் எனும் ஆங்கிலேயர் முக்கியமானவர்
12 இலங்கையிலுள்ள றப்பர் தோட்டத்தில் 12 சதவீதம் வெளிநாட்டு உடைமையாகும்
13 இலங்கையில் 400 ரூபாவுக்கு மேல் மாதவருமானம் பெறுவோர் தொகை 5.2 வீதமாகும்
14 பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் 1957 இல் நிறுவப்பட்டன
15 உலகில் கப்பல் கட்டும்தொழிலில் முதல் நிலையிலுள்ளது யப்பான்
16 சமதர்மநாடுகள் 15. அவற்றின் குடித்தொகை 125.1 கோடி
17 சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தைக் கொண்டிருந்தது – பிரித்தானியா
18 இரண்டாம் உலகம் எனப்படுவது– சமதர்மநாடுகளாம்
19 மூன்றும் உலகம் எனப்படுவது – அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்
20 சர்வதேசச் சங்கம் தோல்வியடையக் காரணம் – தீர்மானங்களைச் செயல் படுத்த அதிகாரமில்லாமை
21 காள்மாக்ஸ் எழுதிய நூல் — 'தாஸ்கப் பீற்றல்'
22 ஈரவலயத்திலுள்ள சதுப்பு நிலத்தின் பரப்பு 50,000 சமைல்
23 இலங்கையில்தனியாளின் நாளாந்த பால்தேவை 4 அவுன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 தற்போது இலங்கையில் ஒரு ஆள்பருகுவது 1 அவுன்ஸ்
25 இலங்கையிலுள்ள பால்மந்தை 4.4 இலட்சம்
26 இலங்கையில் கோழிமுட்டை உற்பத்தி 27.8 கோடி (ஆண்டு)
27 உலகத் தேயிலை உற்பத்தியில் இலங்கைத்தேயிலை 20 வீதம்
28 1971ல் இலங்கைக்குவந்த உல்லாசப்பயணிகள் தொகை 39654
29 தனியார் கைத் தொழில்களில் 48 வீதம் கொழும்பிலிருந்து 15 மைலுக்குள் காணப்படுகிறது
30 இலங்கையிலுள்ள கைத்தொழில்களில் 70 வீதம் தென்மேல் பிரதேசத்திலுள்ளது
31 அபிவிருத்தியடையும் நாடுகள் பெறும் வெளிநாட்டு உதவி (ஆண்டுக்கு) 700 கோடி டாலராகும்
32 உலகின் குடித்தொகை (1971) — 370 கோடி
33 கி.பி 200 இல் உலகக் குடித்தொகை – 650 கோடியாகலாம்
34 இலங்கை மழைவீழ்ச்சியினுல் பெறும் நீர் 10.7 கோடிஏக்கர்
35 உலகின் கைத்தொழிலுற்பத்தியில் ஆசியாவின் பங்கு 2 வீதம்
36 இலங்கையில் படித்தவர்கள் தொகைமுழுத்தொகையில் 82.6 சத வீதம்
37 இலங்கையில் பாடசாலைக்குச் செல்லாதோர் முழுத்தொகையில் 17.5 வீதம்
38 இலங்கையில் நகரங்களில் வாழ்பவர்தொகை 20 சதவீதம்
39 உழைப்பவர்களைச் சார்ந்து வாழ்வோர் தொகை 78 வீதம்
40 இலங்கையில் நெல்பயிரிடப்படும் நிலம் 13 இலட்சம் ஏக்கர்
41 நம் நாட்டில் வேலையின்றியிருப்போர் தொகை 30 இலட்சம்
42 1971 இல் சர்வதேசவர்த்தகத்தில் அபிவிருத்தியடையும் நாடுகளின் பங்கு 18 வீதம்
43 உலகக்கைத் தொழில்உற்பத்திப் பொருள் ஏற்றுமதியில் அபிஅபிருத்தியடையும் நாடுகளின் பங்கு 6 வீதம்
44 இலங்கையில் நிலவுவது கலப்புப் பொருளாதாரம்.
45 1965-70 காலத்தில் இலங்கை அதிகமாக பொருளுதவியையே பெற்றது அபிவிருத்தித்திட்டமின்மையே இதற்குக் காரணம்.
46 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில்ஆள்வீதவருமானம் 200 டாலர். விருத்தியடைந்த நாடுகளில் அது 3500 டாலராகும்.
47 இலங்கையின் சனத்தொகைவளர்ச்சி வீதம் 2.4
48 இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டதும் மக்கள் வங்கி தொடங்கப்பட்டதும் 1961 இல்
49 இலங்கையில் இறப்பு வீதம் 7.9
50 நெல்லினத்தில் அதிசய இனம் I-R 8 எனும் கலப்புஇனமாகும்
51 இலங்கையர் உட்கொள்ளும் புரதம் 30-50 கிராம்
52 இலங்கையில் உள்ள மருத்துவர்களின் விகிதாச்சாரம் 1 இலட்சம் மக்களுக்கு 25.6 ஆகும்
53 புவியின் மேற்பரப்பில் மனிதவாழ்க்கைக்கு ஏற்றது 5(2பாகம்
54 1972 காணிச் சீர்திருத்தச்சட்டத்தின் கீழ் ஒருவர் வைத்திருக்கக்கூடிய நிலத்தினளவு 50 ஏக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 1

(1) அ (2) ஈ (3) ஆ (4) ஈ (5) ஈ (6) iii (7) 1 (8) 1 (9) ii (10) 1 (11) 4 (12) 1 (13) 2 (14) 1 (15) 1 (16) 1 (17) 3 (18) 2 (19 1 (20) 1 (21) 1 (22) 3 (23) 1 (24) 3 (25) 2 (26) 1 (27) 4 (28) 2 (29) 2 (30) 4 (31) 3 (32) 2 (33) 1 (34) 2 (35) 2 (36) 2 (37) 2 (38) 3 (39) 3

## பகுதி 11 [வினாத்தாள் 2)

1 (அ) இலங்கையின் கைத்தொழில் மூலவளங்களில் அதன் கனிப் பொருட்கள் முக்கியமானவை இலங்கையில் காரீயம், வெண்களி, சிலிக்கா (கண்ணாடி மணல்) சுண்ணும்புக்கல் ஆகியன அதிகமாகக் காணப் படுகின்றன காரீயம் கேகாலை, குருநாகல் பகுதிகளிலும், வெண்களி, மீத்தியகொடை, பொறலெஸ்கமுவப் பகுதிகளிலும் சிலிக்கா மாரவில்லை, நாத்தாண்டியாப் பகுதிகளிலும் பெருமளவில் உள்ளன

(ஆ) காரீயம், கரியபூச்சுவகைகள், பென்சில்கள் மின்கலஅடுக்குகள் ஆகியன செய்வதற்கும் வெண்களி பீங்கான் பாத்திரங்கள், சுகாதாரப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும் சிலிக்கா, கண்ணாடி உற்பத்திக்கும் சுண்ணும்புக்கல் சீமெந்து உற்பத்திக்கும் பயன் படுகிறது இவற்றைத்தவிர, புல் (இலுக்) கடதாசிஉற்பத்திக்கும் களிமண் சீமெந்து ஓடு செங்கல் உற்பத்திக்கும்பயன்படுகிறது

(இ) எதிர்காலத்தில் இரும்பும், மாணிக்கக்கற்களும் கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தப் படக்கூடியன அத்துடன் பேசாலையில் பெற்றோலியம் கிடைப்பின் அது எரிபொருளாகவும், இரசாயனக் கைத்தொழிலுக்கு ஒரு மூலப் பொருளாகவும் பயன்படும்

2 (அ) கோட்டொகுதி வாயுக்களும் துகள்களும் அடங்கிய மேகப்படலத்திலிருந்து தோன்றியதென்பதே தற்காலக் கருத்தாகும்

(ஆ) விண்வெளி ஆராய்ச்சிகளின் பயனாக, புவி, சந்திரன், சூரியன் செவ்வாய் ஆகியன பற்றியும் வளிமண்டலம் பற்றியும் பல புதிய விபரங்கள் கிடைத்துள்ளன எதிர்காலத்தில் கைத்தொழிலுற்பத்தி முறைகள் மருந்துவகை உற்பத்தி, உணவுற்பத்தி, பாதுகாப்பு, ஆகியனபற்றி அறியவும் காலநிலையை முன்கூட்டி அறியவும் விண்வெளி ஆராய்ச்சிகள் உதவலாம்.

3 (அ) புத்தசமயம் இலங்கையில் பரவுதற்கு முன்னர் இங்கு ஒழுங்கு முறையான மதவழிபாடு இருக்கவில்லை மக்கள் இயற்கை வழிபாட்டிலேயே ஈடுபட்டிருந்தனர்

(ஆ) அரசன் (தீசன்) புத்தசமயத்தை தழுவியமை, மகிந்த தேரரும் அவரைச் சேர்ந்தவர்களும் பேசிய மொழிக்கும் சிங்கள மொழிக்குமிடையே அதிகவேறுபாடில்லாமை, சிங்களமக்கள் புத்தமதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு விளங்கிக்கொண்டமை, அவர்கள் முன்பு வேறெந்த மதத்தையும் பின்பற்றாதிருந்தமை ஆகிய காரணிகள் புத்தசமயம் இலங்கையில் எளிதாகப் பரவுவதற்கு உதவின.

(இ) புத்தசமயம் பரவியதனுல் சிங்களவரின் நாகரீகம் சிறப்புற்றோங்கியது சிற்பம், ஓவியம், கட்டிடக்கலைஆசியன வளர்ச்சியடைந்தன கல்வியும் இலக்கியமும் விருத்தியடைந்தன

4 (அ) உணவும் பானமும் :— நெல்லரிசிச் சோறு, மரக்கறி, கிழங்கு இறைச்சி, மீன், கீரைவகை ஆகியன பிரதான உணவாகவும், அரிசியிலும் சிறுதானியங்களிலும் செய்யப்பட்ட பலகாரங்கள் சிற்றுணவாகவும் பயன்பட்டன இவற்றுடன் நெய், தயிர், பழவகை ஆகியனவும் பயன் படுத்தப்பட்டன. அதேசமயம் பால், மோர், ஆகியன பிரதானபானங்களாயிருந்தன. சிலர் மதுவையும் அருந்தினர்

(ஆ) உடை :— ஆண்களும் பெண்களும் அரையை மூடும் ஆடையையே அணிந்தனர் ஆனல் விசேட சந்தர்ப்பங்களில் மட்டும் பெண்கள் மேலாடைகளையும் ஆண்கள் சால்வைகளையும் அணிந்தனர். சில பெண்கள் கம்பாயம் போன்ற சேலைகளையும் தாறு போன்ற உடையையும் அனிந்திருக்கக் கூடும்.

(இ) அரசர்களும் பிரபுக்களும் வாட்போர், வில்வித்தை, குதிரையேற்றம் யானையேற்றம் பொழில் விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபட்டனர் அதேசமயம் நீர்விளையாட்டு பாண்டிவிளையாட்டு ஆடல் பாடல்; இசைக்கருவிகளை மீட்டல் ஆகியன பொதுவாக எல்லோரதும் பொழுது போக்காயிருந்தன

5 (அ) இலங்கை குடியேற்றநாடாயிருந்த காலத்தில் உணவுப் பயிர்ச்செய்கை புறக்கணிக்கப்பட்டதும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை விருத்தி செய்யப்பட்டதும் அதனுல் நிலமின்மைப் பிரச்சனை தோன்றியதும், உணவுப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து மலிவாக இறக்குமதி செய்யப்பட்டதும் இன்று உணவு நெருக்கடி உருவாக உதவியுள்ளன

(ஆ) குடியேற்றத் திட்டங்கள் மூலமும் நிலத்தை பங்கிடுவதன் மூலமும் காணியற்றவர்களுக்கு நிலம்வழங்குதல் நீர்ப்பாய்ச்சல் வசதிகளை அதிகரித்தல் கமத்தொழிற் சேவை நிலையங்கள் மூலம் புதியபயிர்களையும், செய்கை முறைகளையும் பரப்புதல் களைகொல்லி பசளை ஆகியவற்றின்பாவனையை அதிகரித்தல் கமக்காரருக்கு கடனுதவி வழங்கல், உத்தரவாத விலை வழங்குதல் பிரசாரஞ்செய்தல் ஆகியன அரசுஎடுத்துவரும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

(இ) எமது நிலத்தை உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தல் அரசாங்கம் வழங்கும் உதவிகள் சேவைகளை நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் படுத்தல் கோதுமை மா உணவுகளை இயன்ற அளவு குறைத்தல் ஆகியன நாம்செய்யக் கூடியனவாம்

ii (அ) 1 கோடியே 27 இலட்சம் (1971 இல்)

(ஆ) 1 விவசாயம் கடற்றொழில் — 16.8 இலட்சம் பேர்

2 கைப்பணியாளரும் ஆக்கத்தொழிலாளரும் 7.0 இலட்சம்பேர்

3 எழுதுவினைஞர் வகை - 1.5 இலட்சம் பேர்

4 வர்த்தக ஊழியர் — 2.3 ,, ,,

5 போக்குவரத்து சேவை 1.3 ,, ,,

6 பொழுது போக்கு 1.5, ,,

7 சுரங்கத்தொழில் — .1 ,, ,,

(இ) 15-24 வயதுப்பிரிவில்

(ஈ) பழைய கல்வித்திட்டம் எமதுநாட்டின் சமூக பொருளாதாரதேவைகளுக்குப் பொருத்தமற்றதாயிருந்தது அது தொழிற் கல்வியைவிட ஏட்டுக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதுவினைஞர் வகுப்பினரையே அதிகமாக உருவாக்கியது. இலங்கையில் இன்று எழுதுவினைஞர்களும் ஏட்டுக்கல்வி நிபுணர்களும் அதிகமாகத் தேவையில்லை. இதனால்தான் வேலையின்மைப்பிரச்சனை உருவாகியுள்ளது

(உ) புதிய கல்வித்திட்டத்தைச் செயல்படுத்தியமை, தேசிய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகச் சில வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்தமை, பயிர்த் தொழிலடிப்படையிலும் உள்ளூர்மூலப்பொருளடிப்படையிலும்பலகைத்தொழில்களை ஆரம்பித்தமை பயிர்த்தொழிலையும் கைத்தொழில் கலையும் தொடங்குவதற்குஅவசியமான மூலதனத்தையும்நிலத்தையும் மக்கள்எளிதாகப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியமை ஆகியனவற்றின் மூலம் இப்பிரச்சனையைத் தீர்க்க அரசு முயல்கிறது

iii (அ) தேசிய அரசப்பேரவை

1972 க்கு முன் 2 சபைகளையும் முடியையும் உறுப்பினராகக்கொண்ட பாராளுமன்றம்ஆட்சியைநடத்தியது அதன் பிரதிநிதிகள் சபை மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 101 பிரதிநிதிகளைக் கொண்டிருக்க செனற் 30 நியமனப் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது தேசியஅரசப் பேரவை ஒரே சபையாகவும், இறைமையும் தன்னாதிக்கமுமுள்ளதாகவும் 6 நியமனப் பிரதிநிதிகளுட்பட 157 பிரதிநிதிகளை யுடையதாகவும் விளங்குகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஆள்பதி பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாகப் பணிபுரிந்தார். ஆனுல் குடியரசுத்தலைவர் நாட்டின் தலைவராக மக்கள் பிரதிநிதியானபிரதமராலேயே நியமிக்கப்படுகிருர். மசோதாக்களை அங்கிகரித்தல் அவசர காலச் சட்டங்களைப் பிறப்பித்தல் முதலியன இருவரதும் பொதுக்கடமைகளாகும்

1 புதிய அரசியலமைப்பினுல் நாம் பிரித்தானிய முடியிலிருந்து பூரணமாக விடுபட்டுள்ளோம்

2 எமது நாடு சம்மந்தப்பட்ட குடியியல் நீதிபாலன அதிகாரங்கள் முழுவதும் இன்று தேசியஅரச பேரவையைச் சேர்ந்துள்ளன

iV 1 (அ) உரிமையென்பது சமுதாயம் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்குவதாகும். கடைமையென்பது அங்கத்தவர்கள் சமுதாயத்துக்குச் செய்யவேண்டியதாகும்

(ஆ) சாதாரண நிலையில் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படமுடியாமை கைது செய்யப்படின் 24 மணி நேரத்துக்குள் நீதிக்குமுன் கொண்டுவரப்படுதல், குற்றம் நிருபிக்கப்படும் வரை தனது சாட்சியை எடுத்துக்கூற உரிமை, ஆகியன தனியாள் உரிமைகளில் பிரதானமானவை

(இ) கடமையைச் செய்யாதவர் உரிமையைக் கோரத் தகுதியற்றவராவர் எனவே கடமைக்குப் பின்தான் உரிமை

(ஈ) பாடசாலைக் கட்டுப்பாடுகளை அனுசரித்து நடத்தல் அங்குள்ள வசதிகளை நல்லமுறையில் பயன்படுத்தல் ஆசிரியர்களைமதித்து நடத்தல். சகமாணவர்களுடன் அன்பாகப்பழகுதல் பாடசாலை உபகரணங்கள் சொத்துக்களைப் பேணுதல் ஆகியன மாணவரின் கடமைகளாகும் தனது திறமைக்கும் மனப்பாங்குக்கும் ஏற்றகல்வி வசதி போதனுவசதிகளைப்பெறுதல் பிரதான உரிமைகளாகும்.

v 2 (அ) மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராம சபை ஆகியன.

(ஆ) உள்ளூரயட்சி சிறியநிர்வாகப் பிரிவில் இடம் பெறும் அநு மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய ஆட்சி நாடுமுழுவதிலும் பரந்தது அது நாடு முழுவதுக்கும் பொதுவானது.

(இ) தமது நிர்வாகப் பிரிவில் சுகாதாரவசதிகள் போக்குவரத்துவசதிகள் மின்சாரவசதிகள் பொழுது போக்கு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் பிரதான பணிகளாகும்

(ஈ) ஆதனவரி. மின்சாரவரி, வர்த்தகதாபனங்கள் மீதான அனுமதிவரி முதலியனவற்றின் மூலம் பணம் திரட்டு கின்றன

(உ) உள்ளூராட்சி மன்றுகளின் அதிகாரத்தைக் கூட்டவோ குறைக்கவோ, நீக்கவோ, தேசிய அரசம் பேரவைக்கு அதிகாரமுண்டு. மேலும் உள்ளூராட்சி மன்றுகளின் நிர்வாகத்தில் ஊழல்காணப்படின், அவற்றைக் கலைக்கவும் பொறுப்பற்ற தலைவர்களைப் பதவியிலிருந்து நீக்கவும் மன்றுகளின் அலுவல்களைப்பரிசிலனை செய்யவும், ஆணைகளைப் பிறப்பிக்கவும், சட்டவிதிகளை இயற்றவும் மன்றத்தைக்கலைக்கவும் உள்ளூராட்சி மந்திரிக்கு அதிகாரமுண்டு

V(அ) இன்றைய உலகில் எந்தநாடும் தனக்குவேண்டிய எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்வதில்லை, உற்பத்தி செய்யவும் முடியாது. ஒவ்வொருநாடும் தன்னால் எளிதாகவும், குறைந்தசெலவிலும் உற்பத்தி செய்யக் கூடிய சிலவற்றையே உற்பத்தி செய்கிறது. இவ்விதமாக ஏற்பட்ட தொழிற் பிரிப்பும் உலகச்சந்தையுமே சர்வதேசவர்த்தகத்துக்குக் காரணங்களாகும்.

ஆ இரண்டுநாடுகள் தத்தம் நாணயங்களினடிப்படையில் பொருட்களின் பெறுமதியை நிர்ணயித்து பண்டங்களை மாற்றுவது இருபக்கவர்த்தகமாகும் இரண்டுநாடுகள் தமக்கிடையிலான வர்த்தகத்தின்போது மூன்றாவது நாட்டின் நாணயத்தை ஊடகமாகப் பயன்படுத்தல் பலபக்க வர்த்தகமாகும்

இ சில அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இரசாயனப் பொருட்கள் எரிபொருள் இயந்திரசாதனம் முதலியவற்றை வெளிநாடுகளில் வாங்குவதற்கு வெளிநாட்டுச் செலாவாணி தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ நமது ஏற்றுமதிப் பொருட்களும் அவற்றின் பெறுமானமும் குறைவாயிருப்பதே வெளிநாட்டுச் செலாவணி குறையக் காரணங்களாம்

உ நம்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியவற்றின் இறக்குமதியைக் குறைத்து நமது ஏற்றுமதிப் பொருட்களுக்கு அதிக விலை பெறுவதன் மூலம் அதிக வெளிநாட்டுச் செலாவணியைப் பெறலாம்

ஊ சில உணவுப் பொருட்களில் (உம் கோதுமை மா உணவுகள்) விருப்பம்காட்டாமல் உள்நாட்டுத் தானியங்களைக் கூடியளவு பயன்படுத்துவதன் மூலமும் அதிகவிலையுள்ள வெளிநாட்டுப் பொருட்களை உபயோகிப்பதை அடியோடு நிறுத்தியும், நாம் அரசுக்கு உதவலாம்

## 2

### வினாத்தாள் 1

(1) 1 (2) 2 (3) 2 (4) 1 (5) 1 (6) 3 (7) 2 (8) 3 (9) 1 (10) 4 (11) 1 (12) 2 (13) 2 (14) iii (15) ii (16) i (17) ii (18) ii (19) 1 (20) 3 (21) 1 (22) 1 (23) 2 (24) 2 (25) இ (26) இ (27) இ (28) 1 (29) இ (30) இ (31) அ (32) 2 (33) அ (34) 1 (35) ஆ (36) 4 (37) 3 (38) 4 (39) 1 (40) ஈ

### வினாத்தாள் — 2.

1 அ சீமெந்து, இரசாயனப் பொருட்கள், கண்ணாடி, சீனி கடதாசி

ஆ சீமெந்துக்கு வேண்டிய பிரதான மூலப் பொருட்கள் சுண்ணக்கல் களி, கிப்சம் என்பன இவற்றில் கிப்சம் இறக்குமதி செய்யப் படுகிறது ஏனையவை புத்தளம் யாழ்ப்பாணபகுதிகளில் கிடைக்கின்றன. இரசாயனப் பொருட்களின் மூலப் பொருளான உப்பு ஆனையிறவிலிருந்து கிடைக்கிறது கண்ணாடி உற்பத்திக்கு வேண்டிய சிலிக்கா மாரவில்லை பகுதியில் கிடைக்கிறது. சீனி உற்பத்திக்கு வேண்டிய கரும்பு கந்தளாயிலும் கல்லோயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிலும் செய்கைபண்ணப் படுகிறது. கடதாசி உற்பத்திக்கு வைக்கோலும் கழிவுகடதாசியும் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன இவைஉள்நாட்டில் சேகரிக்கப் படுகின்றன

இ சீமெந்து எமது தேவையை அநேகமாகபூர்த்தி செய்கிறது இரசாயனப் பொருட்களில் காரச்சோடா குளோரீன் ஆகியன போதியளவு கிடைக்கின்றன. கண்ணுடிப் பொருட்களில் தன்னிறைவு அடைந்து வருகிறோம். சீனி உற்பத்தி எமது தேவையில் ¼ பங்கையே பூர்த்தி செய்கிறது கடதாசியைப் பொறுத்தவரை வெள்ளை அச்சிடும்தாள் இரட்டிக்கும்தாள் தாளட்டை ஆகியவற்றில் மட்டும் எமது தேவை பெருமளவு பூர்த்தி செய்யப் படுகிறது

ஈ இலங்கையில் எதிர்காலத்தில் நன்கு விருத்தி செய்யக் கூடியன உருக்கு, நெசவுக் கைத்தொழில்களாம்

உ மூலதனம் போதாமை, தொழில் நுட்பத்துறையில் பின்தங்கியிருத்தல் ஆகியன காரணங்கள்

2 அ 1561-62 காலத்தில் போத்துக்கீசருக்கெதிராக முல்லேரியாவில் பெரும் போரில் ஈடுபட்டதோடு தொடர்ந்து அவர்கள் மீது தாக்குதல்களை நடத்திவந்தான்

ஆ முல்லேரியாப் போரில் மிக்க தீரத்துடன் போரிட்டுப் போத்துக்கீசரைத் தோற்கடித்ததோடு அவர்களைக் கோட்டையிலிருந்து கொழும்புக்குப் பின்வாங்கச் செய்தான். ஆயினுங் கடற்படை இல்லாமையால் கொழும்பிலிருந்து துரத்தமுடியவில்லை

இ பொதுமக்கள், இராஜசிங்கன் போத்துக்கீசரை இலங்கையிலிருந்து வெளியேற்றி விடுவான் எனநம்பியிருந்தனர்.

ஈ அவனது போர்த் திறமையும், நுண்மதியுமே அதற்குக் காரணங்களாகும்

உ முல்லேரியாவில் பீரங்கிகளுடன் தன்னை எதிர்த்த போத்துக்கீசரை புறமுதுகு கண்டான். தனது எதிர்ப்பைத் தளரவிடாது, அவர்களைக் கோட்டையிலிருந்து கொழும்புக்குப் பின்வாங்கச் செய்தான்

3 அ வடஅகலக்கோடு 6° முதல் 10° யும், கிழக்கு நெடுங்கோடு 80° முதல் 82° யும் இலங்கையின் அகல நெடுங்கோட்டு நிலையங்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ பேதுருமேடை, முத்துச்சலாப மேடை வாட்ஜ்மேடை ஆகியனமேடைகள்

இ கரையோரச் சமவெளி, ஆறுதின்ற சமவெளி, மத்திய மலைநாடு, கல்ஓய மலைத்தொடர், சப்பிரகமுவ மலைத் தொடர் ஆகியன.

ஈ கரையோரச் சமவெளியில் இல்மனைற், சிலிக்கா,மொனசைற் முதலிய பெறுமதியுள்ள கனிப் பொருள் மணல்வகை உண்டு

உ தொடக்கத்தில், உயர்நிலமாயிருந்து பின்நிலத்தேய்வு மண்ணரிப்பு ஆகியவற்றால் பதிந்து தாழ்நிலமாகிய பிரதேசமாகும். இதில் ஆங்காங்கு தனிக் குன்றுகள் காணப்படும்

4 அ அநுராதபுர, உபதிஸ்ஸ, உருவெல மகா தித்த கோகர்ண, களனி, கதிர்காமம் ஆகியன

ஆ இவ்விடங்கள் ஆறுகளுக்கு அண்மையில் அமைந்தன இங்கு நீர் வளமானமண், போக்குவரத்துவசதி, என்பவற்றுடன் சீரான காலநிலையும் காணப்பட்டது அன்றியும் இங்கு வியாபாரப் பொருட்கள் கிடைத்ததும் இவை தாய்நாட்டிற்கு ஓரளவு அண்மையில் அமைந்ததும் இங்கு ஆரியர் குடியேற உதவின

இ ஆரியரின் வருகையினால் 1 ஒழுங்குமுறையான பயிர்ச் செய்கை தொடங்கியது 2 வைதீகசமய வழிபாட்டு முறைகள் தோன்றின 3 இரும்பின் உபயோகம் அறிமுகப் படுத்தப் பட்டது

5 1 பணத்தைச்சேமிப்பதற்கு வசதிகள்செய்துகொடுத்தல், அப்பணத்தை முதவீடு செய்வதன்முலம் தொழில், வருமானம் ஆகியவற்றைப்பெருக்குதல் ஆகியன தேசியசேமிப்புவங்கியின்நோக்கங்கள்

5 ஒரு ரூபாவை வைப்புத் தொகையாகச் செலுத்துவதன் மூலம் இவ்வங்கியில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

ε இவ்வங்கியில் சேமிக்கும் பணத்தின்கு 7.5 சதவீத தொடர்வட்டி உண்டு 250 ரூபா வரை. எத்தருணத்திலும் இவ் வங்கியிலிருந்து மீட்கலாம் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை வைத்திருக்கலாம்: ஒருவர் தமது கணக்கிலிருக்கும் பணத்துக்கு உரிமையாளராக இன்னொருவரை நியமிக்கலாம். ஒருவர் தமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் நன்கொடைப் பத்திரங்களை வழங்கலாம், சங்கங்கள் பேரிலும் கணக்குகளை வைத்திருக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 வர்த்தக வங்கிகளில் நடைமுறையைக் கணக்கை வைத்திருக்க வசதி உள்ளது. மேலும் வர்த்தக வங்கிகள் சேமிப்தலிலும் அதிகமாக கடன் வழங்கலில் ஈடுபடுவதோடு காசோலைகள் கட்டளைகள் மூல மாகப் பணத்தை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மாற்றிப் பணம்பெறவும் வசதியளிக்கின்றன

li 1 மனித குடும்பத்தின் அங்கத்தினர் என்றவகையில் அதன் தோற்றம் வளர்ச்சி முன்னேற்றம் ஆகியன பற்றிஅறிதல் பயனுள்ளது

2 உயிர்ச்சுவடுகள் மண்தட்டுக்கள் புராதன மண்டை யோடுகள் எலும்புகள் ஆகியவற்றைப் பரீட்சிப்பதன் மூலம் அறியலாம்,

6 யாவா சீனு ரொடீசியா ஜேர்மனி பிரான்ஸ் என்னுமிடங்களில்

4 வானரமனிதன் குனிந்துநடந்தான்' ஆனல் நவீன மனிதன் நிமிர்த்து நடத்தான். மேலும்வானரமனிதனின் மூளை சிறிதாயிருந்தது நவீன மனிதனின் மூளை பெரிது வானரமனிதனின் பல்ஒன்றின் மேல் ஒன்று அடுக்கியதாக காணப்பட்டது ஆனல் நவீன மனிதனின் பல் வரிசையாக உள்ளது. அன்றியும் நவீன மனிதனின் பெருவிரல் வானரமனிதனின் விரலை விடநீண்டது

5 மக்களினங்களின் தோற்றவேறுபாடுகளுக்கு அவை வாழ்ந்தபிரதேசங்களின் சூழல் வேறுபாடுகளே காரணங்களாகும்.

6 பழையகற்கால மனிதனைப்போல இலங்கையின் ஆதிமனிதனும் மரணத்தின் பின் வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டிருந்தான் அன்றியும் கூரிய கல்லாயுதங்களை இவர்களும் பயன் படுத்தியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

iii 1 புதியகற்கால மனிதன் நிச்சயமாக உணவைப் பெறும் பொருட்டுக் கமத்தொழிலில் ஈடுபட விரும்பினன். ஆற்றங்கரைகளில் வளமான மண், பொருத்தமான காலநிலை, தட்டையான நிலம் ஆகியன காணப்பட்டதனல் அங்கு குடியேறினன்

2 ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் பயிர்ச் செய்கைமூலம் நிச்சயமாக உணவு கிடைத்ததினல் அவன் ஓய்வுநேரங்களில் உலகியல் விடயங்களைப் பற்றி சிந்திக்கவும் செயலாற்றவும் முடிந்தது. இவற்றின் விளைவாக அவன் நாகரிகத்தில் வளர்ச்சியடைந்தான்

3 நைல், யூபிறதீஸ் தைகிரிஸ் இந்துநதி, ஹோயாங்கோ என்னும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளே நாகரிகத்தின் பிறப்பிடங்களாகும்.

4 எகிப்திய (நைல்நதி) நாகரிகத்தைப்பற்றிய விபரங்களைப் பப்பிரஸ் ஏட்டுக்குறிப்புகள், பிரமிட்சுவர்கள், கோவில்களிலுள்ள பொறிப்புக்கள், மனேகோ ஆசிரியரின் குறிப்புக்கள் ஆகியவற்றிலிருந்து பெறலாம்

5 யூபிறதீஸ் தைகிரிஸ் நாகரிகத்தைப் பற்றிய விபரங்களைக் களிமண் தட்டுக் குறிப்புக்களிலிருந்து பெறலாம். ஹோயாங்கோ நாகரிகத்தைப் பற்றிய விபரங்களை எலும்புகள், ஆமையோடு பட்டுத்துணி மூங்கில் மரப்பலகை ஆகியவற்றிலுள்ள குறிப்புகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv அ 1 தொழில்துறைகளில் இயந்திரசாதனங்கள் ஈடுபடுத்தப்பட்டமையே கைத்தொழிற்புரட்சியாகும்.

ஆ பிரித்தானியா, நீண்டகரையோரம், கப்பற்போக்குவரவுக் கேற்ற நதிகள் நிலக்கரி, இரும்பு ஆகியவற்றுடன், மூலப் பொருட்களைப் பெறவும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும் ஏற்ற குடியேற்றப் பேரரசு ஒன்றைக் கொண்டிருந்ததும் அங்கு கைத்தொழிற் புரட்சி முதலில் உண்டாகக் காரணங்களாகும்

இ மக்கள் கிராமப் புறங்களைவிட்டுத் தொழிற்சாலைப் பிரதேசங்களில் குடியேறியமை, சேரிகள் தோன்றியமை, தொழிலின்மைப் பிரச்சனை தலைதூக்கியமை ஆகியன 3 முக்கிய விளைவுகளாகும்.

ஈ சிக்கலான கணக்குகளை விரைவாகச் செய்து விடை காண்பதிலும் நிர்வாக வேலைகளைச் செய்வதிலும், உற்பத்திநடவடிக்கைகளில் பங்கு கொள்வதிலும் வேகமாகச் செல்லும் விண்வெளிக்கப்பல் வானூர்திகள் போன்றவற்றின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் கணனிகள் மனிதனுக்கு உதவுகின்றன.

உ பொதுநிர்வாக சேவைக்குத் தகுதியான ஆட்களைத் திரட்டுவதிலும் தேர்வுந்திணைக்களத்தின் தேர்வுகளில்பெறு பேறுகளை அறிவதிலும் கணணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

iv ஆ 1 உலகமக்களிடையே ஏற்படும் பிரச்சனைகளைச் சமாதானமாகத் தீர்த்தல், உலக மக்கள் சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்காக சமுக பொருளாதார துறைகளில் சட்ட திட்டங்களை ஒழுங்கு செய்தல் ஆகியன ஐ. நா வின் பிரதான நோக்கங்களாகும்

2 பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, சமூக பொருளாதர சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை, செயலகம், சர்வதேச நீதிமன்றம் ஆகியன அதன் 6 உறுப்புக்களாகும்.

3 அதில் உறுப்பினராயுள்ள நாடு தனது வெளிநாட்டுப் பிரச்சனைகளை ஐ. நா வில் முறையிட்டால் சமாதான தீர்வுகளைக்காண ஐ.நா. உதவும். மேலும் ஐ. நா. வுடன் இணைந்த சர்வதேச நிறுவனங்கள் அங்கத்துவநாடுகளுக்கு சமூக பொருளாதாரத் துறைகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்குகின்றன

4 இலங்கையின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஐ. நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

v 1 தனியொருவர் செய்யமுடியாதவற்றைப் பொதுப்பேற்றுச் செய்தல் ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் என்றரீதியில் இயங்குதல்; தன்னிச்சையாக உருவாகுதல் ஆகிய பண்புகள் கூட்டுறவியக்கத்தின் அடிப்படை அமிசங்களாகும்

2 பொருள் உற்பத்தி விநியோகம் மற்றும் பல்வேறு தொழில்கள் சேவைகள் (உ ம் கடன் வழங்கல்) ஆகிய துறைகளில் கூட்டுறவு இயக்கம் செயல்படுகிறது

3 பொருட்களை உற்பத்திசெயதல், விநியோகித்தல், சேவைகளை நடாத்துதல் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், மக்கள் வங்கியின் பிரதிநிதியாக விவசாயிகளுக்குக் கடன் வழங்கல் ஆகியன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகளாம்.

4 கூட்டுறவு நமது நாட்டின் அபிவிருத்தியில் பெரும்பங்கு வகிக்கிறது கூட்டுறவு இயக்கம் நுகர்வுத் தேவைகளைமட்டும்நிறைவேற்றுது பெரும்பாக அபிவிருத்திச் சபைகள் பல நோக்கச் சங்கங்கள் மூலமாகவும் தற்போது பயிர்த்தொழில் கைத்தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய மூலதனத்தை வழங்குகிறது அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் தோன்றிய பனம் பொருள் உற்பத்திச் சங்கம் நாட்டின் தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்கிறது மேலும் கூட்டுறவுக்கிராமங்கள், கூட்டுறவுக் குடியேற்றங்கள், இளைஞர் குடியேற்றப் பண்ணைகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொறுப்பு முதல் நிலைப் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# 3

## வினுத்தாள்- 2

1 1 வானிலை என்பது குறுகியகாலத்துக்குரிய உண்மையான வளிமண்டல நிலைமைகளாகும். காலநிலை என்பது நீண்ட காலத்துக்குரிய சராசரியான வளிமண்டல நிலைமைகளாகும்.

2 உயரம் அதிகரிக்கும்போது வளியின் அடர்த்தி குறையும் வெப்பநிலை விசேடமாக வளியடர்த்தியில் தான் தங்கியுள்ளது. எனவே மலைநாட்டில் உயரம் அதிகரிக்குமளவிற்கேற்ப வெப்பநிலை வீழ்ச்சியடைகிறது.

3 மேற்காவுகை பருவக்காற்றுக்கள் சூறுவளிகள் என்பவற்றினுல் மழையைப் பெறுகிறது

4 இலங்கையில் தென்மேல்காற்றே அதிகமழையைக் கொடுக்கிறது, அது தென்மேல்பிரதேசத்தில் அதிக ஈரலிப்புடன் வீசுவதனுலும் மேற்குமலைநாட்டுப்பகுதியின் மேல் எழுவதனுலும் அப்பகுதிகளே அதிக மழையைப் பெறுகின்றன. ஏனைய பகுதிகளில் இக்காற்று வரண்டகாற்றாக வீசுவதனுல் அங்கு மழை குறைவாயுள்ளது

2 புவி, தன் ஆரம்பகால வெப்பத்தையிழந்து குளிர்த்த போது வளிமண்டலமும் முகில்களும் உருவாகி மழை ஓய்ந்தது. மழை ஓய்ந்தபின்னர் உலகில் பல்வேறு கால நிலைகள் தோன்றின. அவை உயிரினங்கள் உருவாதற்கு உகந்த சூழலை உருவாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 சகல உயிரினங்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றி
இயல்பான முறையில் படிப்படியாக வளர்ச்சியடைந்தன
3 கடலிலும் நிலத்திலும் வாழும் தாவரங்கள் முள்ளந்
தண்டிலிகள் மீன்கள் ஈருடகஉயிரினங்கள் ஊர்வன முத
லியன பலியோசோயிக் காலத்தில் தோன்றின.
4 கிளைக்குக்கிளை தாவிக்கொண்டிருந் வாலில்லாக் குரங்கி
லிருந்து பரிணாம முறையில் மனிதன் தோன்றினன்.
5 வாலற்ற குரங்கின் உடலமைப்பும் இயக்கமும் மனித
தனைப் போலவே உள்ளன.

3 1 அதென்சின் நிர்வாகத்தில் அதன் ஆண்பிரசைகள் மட்
டுமே பங்குபற்றினர் ஆயினும் அதுமக்கள் ஆட்சிமுறை
யின் ஆரம்பமாகக் கருதப்பட்டது ஸ்பாட்டாவில் முத
லில் அதென்சைப்பேன்ற ஆட்சி நிலவியபோதிலும்பின்
னர் இராவணு ஆட்சி தலை தூக்கியதனுல் ஒரு சிறுகூட்ட
த்தினர் அதனை ஆண்டனர். எனவே மக்களிநலனைவிட
அரசின் நலன் அங்கு பெரிதாகக் கருதப்பட்டது இதனுல்
பிரசைகள் அரசுக்குச் சேவை செய்தலில் தமது முழு
நேரத்தையும் செலவிட்டனர்
2 இலியட், ஒடிசி ஆகியன சிறந்த கிரேக்ககாவியங்கள்
இவை 'ஹோமர்' என்பவரால் ஆக்கப்பட்டன
3 மாணவர்களின் உடலும் உளமும் பூரணமாக வளர்ச
சியடைவதற்கு உதவுவதே கிரேக்க கல்விமுறையின்
சிறப்பமிசமாகும்.
4 சோக்கிறதீஸ்-தத்துவம், அரிஸ்டோட்டல்-வாணியல்
இயூகிளிட்- கணிதம் ஹிப்போகிறிற்றல் - மருத்துவம்

4 1 இந்தியாவிலும் இந்துசமுத்திரப்பிரதேசத்திலும் தமது
ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குப் பிரித்தானியருக்கு
ஒரு துறைமுகம் தேவைப்பட்டது திருகோணமலை இய
ற்கை அரண்களுடன் கூடிய சிறந்த துறைமுகமாயிரு
ந்தது இரண்டாவதாக பிரித்தானியர் இலங்கையின்
கறுவா வியாபாரத்தையும் கைப்பற்ற விரும்பினர்.
2 கண்டியப் பிரதானிகளிற் சி ல ர் அரசனுக்கெதிராகச்
சதிகளில் ஈடுபட்டமை அரசனது ஆட்யிசில் பிரதானி
களும் பிக்குகளும் பொதுமக்களும் அதிருப்தியுற்றமை
அரசனது படைவீரர்கள் முழுமனதுடன் அரசனுக்கு
ஆதரவளியாமை எதெகைப்பொல பிரித்தானியப் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மலைநாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையைப் புகுத்தியதும் தமக்கு வேண்டிய எழுதுவினைஞர்களைப் பெறுவதற்கு ஏற்ற கல்வித்திட்டத்தை அமுல்நடத்தியமையும் பிரதான மாற்றங்களாகும்

4 பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தியினால் உணவுப் பயிர்ச்செய்கை குன்றியது இது இன்றைய உணவு நெருக்கடிக்கு ஒரு காரணமாகும். ஆங்கிலேயரின் கல்வித்திட்டம் நாட்டின் தேவைகளுக்கேற்றதாயிராமையால் எழுதுவினைஞர் வகையைச் சேர்ந்த பெருந்தொகையானோர் உருவாகிய போது தொழிலின்மைப் பிரச்சனை தலைதூக்கியது

5 i சமுதாயத்தில் வறுமை, சமத்துவமின்மை, வேலையின்மை முதலியவற்றை நீக்கி எல்லோருக்கும் சிறந்த வாழ்க்கைமுறையொன்றை ஏற்படுத்துவதே அடிப்படை நோக்கம்

2 N.M. பெரேரா பிலிப்குணவர்த்தன கொல்வின் ஆர் டி சில்வா ஆகியோர்

3 திரு A.E. குணசிங்கவின் தொழிற்சங்க இயக்கம் வலுவிழந்தமை, 1930 ம் ஆண்டளவில் ஏற்பட்ட மலேரியா நோயைத்தடுப்பதில் இடதுசாரியினர் சேவையாற்ற வாய்ப்புகிடைத்தமை, டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுகள் மத்தியதர வகுப்பினருக்குத் திருப்தியளிக்காமை, சூரியமல் இயக்கம், ஆகியன இடதுசாரிஇயக்கம் வளர உதவின

4 ஆரம்ப அரசியல் இயக்கமான தேசியகாங்கிரஸ் நிலஉடைமைபெற்ற உயர் தொழில்களில் ஈடுபட்டவர்களைக் கொண்டிருந்தது அது தீவிரமான கொள்கைகளைப் பின்பற்றவில்லை இடதுசாரிஇயக்கம் மத்தியதர வகுப்பினரால் தொடங்கப்பட்டதுடன் தொழிலாளர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது அன்றியும் அவ்வியக்கம் தீவிர புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த விரும்பியது

ii அ பிரித்தானியா, பிரான்ஸ்

ஆ பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் 19 ம் நூற்றுண்டு முழுவதுமிருந்தநாடுகளில் இந்தியாவும் மலாயாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானவை அதேசமயம் அல்ஜிரியா மொரொக்கோ என்பன பிரெஞ்சுக் குடியேற்றங்களில் முக்கியமானவை

இ அங்கோலா (போத்துக்கல்) சோமாலி (பிரான்ஸ்) புருனே (பிரித்தானியா) சூரினும் (ஒல்லாந்து) ஆகியன இன்றும் குடியேற்றங்களாயுள்ளன.

ஈ தமது குடியேற்றங்களுக்கு அரசியல் சுதந்திரமளித்து அவற்றின் பொருளாதாரத்தில் ஏதும் மாற்றமின்றி அவற்றை வழிநடத்துதல் அவர்களது கொள்கையின் சிறப்பமிசம்

உ போத்துக்கீசர் குடியேற்றங்களைச் சுரண்டுவதையேகொள்கையாகக் கொண்டிருந்தனர் அவற்றுக்குச் சுதந்திரமளிப்பது அவர்கள் கொள்கையாக இருக்கவில்லை

ii அ வெளிநாட்டுச் செலாவணியைப் பெறலாம் வெளிநாடுகளுடன் வர்த்தக பண்பாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்தலாம், வெளிநாட்டினரின் பண்பாட்டை அறியலாம். எமது வர்த்தகப் பொருட்களை விளம்பரப் படுத்தலாம்

ஆ இலங்கை பல பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இன்றியமையாத வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உதவுகிறது.

இ உல்லாசப் பயணிகளுக்கான நவீன விடுதிகளைக்கட்டுதல் வெளிநாடுகளில் இலங்கையின் வளப்பு, சிறப்பு பற்றி பிரசாரம் செய்தல் உல்லாசப் பயணிகளைக்கவரும் இடங்களை மேலும் கவர்ச்சிகரமாக்குதல் வெளிநாட்டு விமானப் போக்குவரத்துச் சேவையை ஒருங்கிணைத்தலும் விரிவுபடுத்தலும் திட்டங்களாம்

ஈ பேருவல, அநுராதபுர பாசிக்குடா கண்டி

iv 1 15 ஆம் நூற்றுண்டில் மேற்கு ஐரோப்பாவில் கல்வி, கலை, மதம் முதலியவற்றில் ஏற்பட்ட புத்துயிர்ப்பே மறுமலர்ச்சியாகும்

2 1453 இல் கொன்ஸ்தாந்திநோப்பின் துருக்கியர்கையில் வீழ்ந்தமை, அச்சுயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டமை கத்தோலிக்க திருச்சபையில் நிலவிய குறைபாடுகள் ஆகியன மறுமலர்ச்சி இயக்கம் பரவ உதவின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மத்தியகால வர்த்தகர்கள் பொருளாதார பலமும் அரசியல் அதிகாரமுமுடையவர்களாக விளங்கினர் அவர்களிடம் புதுமை நாட்டமும் கலைகளில் ஆர்வமும் காணப்பட்டது இவையும் மறுமலர்ச்சிக்கு உதவின

4 மறுமலர்ச்சியின் பயனாக 1 கிழக்கு நாடுகளுக்குக் கடல்வழிகாணும் முயற்சிகளும் 2 தேசஆராய்ச்சிகளும் மேற் கொள்ளப்பட்டன

5 இவற்றின் விளைவாக புவியைப்பற்றிய அறிவு பூரணமாகியது அத்துடன் ஐரோப்பியர் கடல் கடந்து சென்று பல குடியேற்றங்களை நிறுவி அங்கு தமது ஆதிக்கத்தைப் பரப்பினர் இதன் பயனாக, குடியேற்றநாடுகளில் பொருளாதாரச் சுரண்டல் இடம்பெற்று அந் நாடுகளின் விருத்திதடைப் பட்டது

6 மறுமலர்ச்சியின் பயனாகிய அச்சுயந்திரமும், தேசப் படம்வரைகலையும் ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன

V ஆ 1 இந்தியா பாகிஸ்தான் இலங்கை

2 மூலதனம் போதாமை .தொழில்நுட்ப வியலாளர் திறன் மிகக தொழிலாளர் ஆகியோர் போதாமை ஏற்றுமதிச் சந்தை வரையறுக்கப்பட்டுள்ளமை ஆகியன பொதுவான காரணங்களாம்.

3 பயிர்த்தொழிலின் அடிப்படையில் கைத்தொழில்களை விருத்தி செய்யவேண்டும் 2 முதலில் கைத்தொழில்களை விருத்தி செய்ய வேண்டும் 4 கைத்தொழிலையும் கமத்தொழிலையும் ஒரே நேரத்திலேயே விருத்தி செய்யவேண்டும்

4 மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்தல் நாட்டின்வளங்கள் நன்முறையில் பயன்படுத்தப் படுதல் உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகியன 3 நன்மைகள் அதேசமயம் நகர்ப்புறச் சனத்தொகை அதிகரித்தல் சூழல் அசுத்தப்படுதல புராதன தொழில் முறைகள் அழிந்தொழிந்து போதல் ஆகியன தீய விளைவுகளாம்

V 1 மாணவனின் உள உடல் வளர்ச்சியை நெறிப்படுத்தலும் அவனை சமுகத்துக்கும் தனக்கும் பயனுள்ளவனாக ஆக்குதலும் கல்வியின் நோக்கமாயிருக்கவேண்டும்

2 தமது கத்தோலிக்கமதத்தைப் பரப்புவதற்கு ஒருகருவியாகவே போத்துக்கீசர் கல்வியைப் பயன்படுத்தினர்

3 பிரித்தானியர் சமயக்கல்வியில் அதிககவனம் செலுத்தவில்லை. தமது நிர்வாகதேவைகளுக்கு வேண்டிய ஆட்களைப் பெதறுலே அவர்களின் பிரதான நோக்கமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 எல்லோருக்கும் பொதுவான பாடத்திட்டத்தை வகுத்திருத்தல் தொழிற்கல்வியில் கவனம்செலுத்தியிருத்தல் எமது இன்றைய சமுகபொருளாதார தேவைகளுக்கேற்றபாடத்திட்டத்தை வகுத்திருத்தல் ஆகியன

5 கல்விக்காகச் செலவிடப்படும் பணம் வீண்போவதில்லை அது காலக்கிரமத்தில் பயன் தரும் கல்வி கற்றவன்து திறனும் பயனும் கல்வி கற்காதவனைவிட அதிகமாயிருக்கும். இதனால் எதிர்காலத்தில் நாட்டின் விருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் கல்வி வழிவகுக்கிறது

## விடைத்தாள்

1—3 2—4 3— 4-2 5-1 6-2 7-1 8-1 9-3 10-2 11 3
12 அ 13 ஆ 14 3 15 அ 16 ஆ 17 அ 18 அ 19 ஈ
20 அ 21 இ 22 ஆ 23 2 24 அ 25 i 26 i 27 i
28 ii 29 i 30 i 31 i 32 1 33 அ 34 2 35 iv
36 3 37 ii 38 3 39 3 40 ii

# 4

## விடைத்தாள் 1

1 3 2 1 3 1 4 1 5 iii 6 3 7 1 8 1 9 2 10 4 11 iii
12 3 13 ii 14 ii 15 iv 16 1 17 3 18 ii 19 ஆ 20 இ 21 அ
22 இ 23 அ 24 அ 25 ஈ 26 இ 27 3 28 ii 29 2 30 அ
31 4 32 இ 33 ஈ 34 2 35 ஆ 36 3 37 3 38 4
39 2 40 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் 2

1 1 புராதன நூல்கள், கல்வெட்டுக்கள் பழையகட்டிடங்களின் அழிபாடுகள், வெளிநாட்டாரின் குறிப்புக்கள் ஆகியன தகவல்களைப் பெறும் 4 வழிகளாம்

2 பாஹியன் என்னும் சீனயாத்திரிகனின் குறிப்புக்களிலிருந்து பண்டைக்காலத்தில் அநுராதபுரம் அழகும் செல்வச்செழிப்பும் மிக்கஒரு நகராயிருந்தது என்பதை அறியமுடிகிறது

3 பயிர்ச்செய்கைக்காகக் குளங்களைக்கட்டுதல் அவற்றைப் பேணுதல், நீர் விநியோகம் ஆகியன அநுராதபுரக் கால மக்களை எதிர் நோக்கிய 3 பிரச்சனைகளாம்

4 மக்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றியும், அரசர்களின் உதவி மூலமும் தம் பிரச்சனைகளைத் தீர்த்தனர்

5 5ம் மிகுந்து என்ற அரசனிடமிருந்து படைவீரர் அநுராதபுர ஆட்சியைக் கைப்பற்றியதும் சோழர்களின் படையெடுப்பும் அநுராதபுர அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன

6 ருகுணவிலிருந்து வரும் படைகளைத் தடுப்பதற்கும் அப்பகுதியிலுள்ள சிங்களவரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் ஏற்ற நிலையத்தில் பொலநறுவை அமைந்திருந்தது

2 1 நிலக்கரி, நீர்மின் எதிர்காலத்தில் பெற்றோலியம் முற்று நிலக்கரியும் பயன்படுத்தலாம்

2 மலைநாட்டில் படிபோன்ற தரைத்தோற்ற அமைப்பும் ஒழுங்கான பரவலான மழையும் காணப்படுதல், விரைந்தோடும் அருவிகள் காணப்படுதல் நீர்மின்னுக்குத் தேவையிருத்தல் ஆகியன

3 மஸ்கேலிய ஓயாத்திட்டம், மகாவலிகங்கைத்திட்டம், சமனலதிட்டம்

4 மகாவலிகங்கைத் திட்டத்தின் கீழ்மொத்தம் 12 நீர்மின் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன அவற்றில் உக்குவலை நீர்மின் நிலையம் கட்டிமுடிக்கப் பட்டுள்ளது இவற்றின் மூலம் 250 000 கிலோவாற் நீர்மின் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது

3 1 சந்திர கிரகணகாலத்தில் புவியின் நிழல்வட்டமாக விழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் விண்வெளிக்கப்பல்கள் மூலம் எடுக்கப்பட்டபடங்களில் புவி உருண்டையானதாகக் காணப்படுதல். தூரத்தில் வரும் கடற்கப்பலின் புகையோக்கி முதலிற்புலப்படுதல் புவியைச்சுற்றிப் பிரயாணம் செய்து பிரயாணம் தொடங்கிய இடத்துக்கு வரக்கூடியதாயிருத்தல் ஆகியன புவிஉருண்டையென்பதற்கு 4 சான்றுகளாம்

2 புவி ஒருமுறை சூரியனைச்சுற்றிவர 365¼ நாட்கள் செல்லுகின்றன இதனுல் 4 வருடத்துக்கொருமுறை வருடத்தில் 366 நாட்கள் வருகின்றன அதுவே 'லீப்' எனபடும்

3 புவியின்வட, தென்முனைவுகளை இணைக்கும் கற்பனைக்கோடே புவியச்சாகும்.

4 அது,சரிந்திருப்பதனுல் புவியின் வடதென்பகுதிகள் வெள்வேறு காலங்களில் சூரியவெப்பத்தை அதிகமாகப் பெறுகின்றன இதனுல் பருவகாலங்கள் தோன்றுகின்றன

5 அகலக்கோட்டு நெடுங்கோட்டு வலையமைப்பு, புவியில் உள்ள இடங்களின் நிலையங்களை அறியஉதவுகிறது நெடுங்கோடுகள்மட்டும் இடங்களின் நேரங்களை அறிய உதவுகின்றன.

6 காலை 8.40

7 1 ரோமியுலஸ், ரீமஸ் எனும் சகோதரர்கள்

2 உரோமில் குடியரசு முறையான ஆட்சி நிலவியது அவ்வாட்சியில் பற்றீசியன்ஸ் என்ற உயர்குடிமக்களே பொறுப்புக்களை வகித்தனர். அத்துடன் 2 கொன்சல்கள் நிர்வாகத்துக்குப் பெபறுப்பாயிருந்தனர். அதென்ஸ்நகரிலும் குடியாட்சியே நிலவியது ஆயினும் அவ்வரசின் பிரஜைகளாயிருந்த ஆண்கள்மட்டுமே ஆட்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றினர்.

3 யூலியஸ் சீசர் ரோம அரசை விரிவுபடுத்தினுன் அத்துடன் நீதிவழுவாது ஆட்சி செலுத்தினுன்

4 உரோமர்இடாம்பீகமான வாழ்க்கையை நடத்தியமை பயிர்ச் செய்கையைப் புறக்கணித்தமை அடிமைமுறையினுல் சோம்பேறிகளானமை ஆகியன அவர்களின வீழ்ச்சிக்கு வழிவகுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 வேர்ஜில் என்ற ஆசிரியர் ஈனெட் என்ற நூலை எழுதினர்
லீவி ,, ,, உரோம வரலாற்றை

5 i டொலமி, ஏரட் டோஸ்தினஸ் சீனர்

2 16 ம் நூற்றாண்டுக்கு முந்திய படங்கள் கண்டங்களின் உருவத்தையும் பல விபரங்களையும் பிழையாகக்காட்டின அவை அளவுத்திட்டத்தின்படி கீறப்படவில்லை இதனால் தூரங்களும் பிழையாக உள்ளன.

3 நிகலஸ்பிஷர் பிலிப் போல்தியஸ், றொபேட் நொக்ஸ்

4 புவியைப் பற்றிய விபரங்களைச் சரிவரக்காட்டவும், அதனடிப்படையில் அதனைப்பற்றிக்கற்கவும், ஆய்வுகள், முடிவுகளை மேற்கொள்ளவும் தேசப்படங்கள் தேவை

5 வான்ஒளிப்படங்கள் திருத்தமான, பூரணமான விபரங்களைக் காட்டுவதால் இவை புவியியல் ஆய்வுக்கு மிகப் பயனுள்ளவை அன்றியும் வான்ஒளிப்படங்கள் மூலம் கனிப்பொருட்களின் பரம்பலையும் அறியலாம்.

ii 1 ஆசியாவுக்குச் செல்வதற்குக் கடல் வழிகாண வேண்டிய அவசியம் ஏற்பட்டமை, (2) கொன்ஸ்தாந்திநோப்பிளிலிருந்து பல அறிவுநூல்கள் ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதால் அங்கு மறுமலர்ச்சி ஏற்பட்டமை என்னும் இரண்டும் பிரதான விளைவுகளாம்.

2 பட்டு, பருத்தி, ஆடைகள் வாசனைத்திரவியங்கள், மட்பாண்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்காக ஆசியாவுக்குச் செல்லவிரும்பினர்

3 ஸ்பெயின், ஒல்லாந்து, போத்துக்கல்

4 கிழக்காசியாவுக்கு வந்த அன்னியர் இலங்கையின் கேந்திரநிலையத்தையும் அதன் வாசனைத் திரவியங்களின் மகிமையையும் கண்டு அதனைக் கைப்பற்றினர்

iii 1 கோட்டை இராச்சியத்தின் பிரிவுகளை ஆண்ட மூன்று அரசர்களிடையே ஒற்றுமை இல்லாமை வீரபராக்கிரமபாகு மாயாதுன்னைக்கெதிராகப் போத்துக்கீசரின் உதவியை நாடியமை தர்மபாலன் தனக்குப்பின்னர் கோட்டையின் ஆட்சியுரிமையைப் போத்துக்கீசருக்கு எழுதிக்கொடுத்தமை ஆகியன

2 போத்துக்கீசரின் கொடுமையான ஆட்சியும் வரிமுறைகளும் கண்டியரசர்களின் எதிர்ப்பும் ஒல்லாந்தரின் தலையீடும் போத்துக்கீசரின் ஆட்சி வீழ்ச்சியடைய வழிவகுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோமன் கத்தோலிக்கமதம் பரவியமை சில போத்துக்கேசப் பெயர்கள் சுதேசமொழிகளிற் கலந்தமை அவர்களது நிலநாசக்கொள்கையினால் பயிர்த்தொழில் பாதிக்கப்பட்டமை ஆகியன.

ii i ஒல்லாந்தர் போத்துக்கேசரைப்போலவே தமது வர்த்தகநலன்களை பேணியபோதிலும் உள்நாட்டில் பயிர்த்தொழிலையும் சிறு கைத்தொழிலையும் ஊக்குவித்தனர். இதன் மூலம், உள்நாட்டுவருமானத்தைப் பெருக்கி இறக்குமதிகளைக் குறைக்கலாமென ஒல்லாந்தர் எண்ணினர்.

5 ஒல்லாந்தர் இலங்கையில் புரட்டஸ்தாந்த மதத்தைப் புகுத்தினர் றோமன்-டச்சுச்சட்டத்தை அறிமுகப்படுத்தினர். அவர்கள் இலங்கையருடன் கலப்புமணம் செய்தமையால் பறங்கியர் என்ற ஒரு சாதியினர் உருவாகினர்

v அ சனத்தொகைஅதிகரிப்பு,. கைத்தொழில் விருத்திக்குறைவு மூலதனம் போதாமை ஆகியன பிரதான பிரச்சனைகளாம்.

சனத்தொகையதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்குத் திட்டமிட்டு பிரசாரம்செய்து குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

கைத்தொழில்களைப் பொறுத்தவரை உழைப்புச் செறிவானவற்றில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். மூலதனத்தை இலகுவான நிபந்தனைகளில் வெளிநாடுகளிலிருந்து பெற முயல்வதோடு உள்ளூரில் சேமிப்பை ஊக்குவித்தும் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தியும் இறக்குமதிகளைக் குறைத்தும் மூலதனத்தைப்பெற முயல வேண்டும்.

3 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்குத் தமதுநாடுகளில் அதிக வரிகளை விதிக்காமலும் நியாயமான விலைகொடுத்தும் இலகுவான நிபந்தனைகளில் நீண்டகாலக் கடன் வழங்கியும் தொழில்நுட்ப உதவி வழங்கியும் உதவலாம்,

அபிவிருத்தியடைந்தநாடுகளில் பரந்தநிலப்பரப்பில் பெரிய அளவில் பயிர்ச்செய்கை நடைபெறுகிறது. நவீனமுறைகளும் எந்திர சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அன்றியும் அங்கு உள்நாட்டு நுகர்ச்சிக்குமட்டுமன்றி ஏற்றுமதிக்காகவும் பயிர்செய்யப்படுகிறது-அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சிறியநிலப்பரப்பில் பிற்போக்கான முறைகளில் பெரும்பாலும் உள் நாட்டுத் தேவைக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது

ஆ 1 உலகிலுள்ள பல நாடுகளில் பெருகிவரும் மக்களுக்குப் போதிய உணவை நிச்சயமாகப் பெறமுடியாமலிருப்பதே உணவு நெருக்கடியாகும்

2 பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலப்பரப்பு முழுவதையும் பயன்படுத்தல் முன்னேற்றமான பயிர்ச் செய்கை முறைகளைப் பின்பற்றல், பயிரழிவுகளைக் கட்டுப்படுத்தல், நீர்வழங்கல் முறைகளை விருத்தி செய்தல் ஆகியன உணவு நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்டுவரும் 4 நடவடிக்கைகளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 உலகில், பஞ்சம், பட்டினி உணவில் ஊட்டமின்மை முதலிய வற்றை நிவர்த்திசெய்வதற்கு வேண்டிய உதவிகளையும் தகவுரைகளையும் வழங்குதல் இதன் நோக்கங்களாம்

4 1 உலக உணவு வேலைத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்திவருகிறது 2 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பயிர்த் தொழில் முயற்சிக்காகப் பலசர்வதேச நிறுவனங்களிடமிருந்து பணஉதவியைப் பெற்றுக் கொடுக்கிறது 3) சர்வதேச உணவுமாநாடொன்றைக் காலத்துக்காலம் கூட்டி உணவுப் பிரச்சனையைத் தீர்க்கும் வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்துகிறது

5 தாவரஇலைகளிலிருந்து தயாரிக்கப்படும் புரதம் தாவரங்களிலுள்ள ஊட்டப் பொருட்கள் மூலம் தயாரிக்கப்படும் பால், பெற்றோலியம், மீத்தேன்வாயு, நிலக்கரி என்பவற்றிலிருந்து தயாரிக்கப்படும் புரதம் ஆகியன உணவு நெருக்கடியை நீக்க உதவலாம்

v 1 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்க்கைத்தரம் குறைவாயுள்ளது உற்பத்திமுயற்சிகள் முன்னேற்றமையே இதற்குக்காரணம் உற்பத்தி முயற்சிகளுக்கு மூலதனம் தேவை, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஆள்வீதவருமானம் குறைவாயிருப்பதனால் சேமிப்பும் சாத்தியமில்லை இதனால் வெளிநாட்டுதவியைப் பெறுதல் அவசியமாயுள்ளது

2 ஆசிய அபிவிருத்திவங்கி, போட் நிதிஏற்பாட்டுநிறுவனம்கொழும்புத்திட்டம், சர்வதேச அபிவிருத்திச்சங்கம் சர்வதேசநாணயநிதி

3 (1) இரசியா - ஒறுவெல உருக்குத் தொழிற்சாலை நிர்மாணம் (2) கிழக்கு ஜேர்மனி - துல்கிரியாவிலுள்ள நெசவுஆலை நிர்மாணம்

4 வெளிநாட்டு உதவியைப் பெற்றதனால் எமது பொருளாதார அமைப்பில் மாற்றமோ அபிவிருத்தியோ ஏற்படவில்லை கடன் சுமையும், வட்டியிறுப்பும் பொருளாதாரத்தைப் பாதித்து வருகின்றன

# 5

## வினாத்தாள் 1

(1) 1 (2) 2 (3) 2 (4) 1 (5) 3 (6) 3 (7) 1 (8) 3 (9) 3
(10) 2 (11) 4 (12) 1 (13) 3 (14) 1 (15) 1 (16) iv (17) iii
(18) ii (19) 1 (20) 2 (21) 4 (22) 1 (23) 2 (24) 1 (25) 2
(26) 3 (27) 4 (28) 2 (29) 2 (30) 3 (31) 3 (32) 3 (33) ii
(34) 2 (35) iii (36) ii (37) 3 (38) 4 (39) 4 (40) 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் 2

1 1 தென்மேற்கு தாழ்நிலம் (2) வடக்கு, கிழக்கு, வடகிழக்குதாழ் நிலங்கள் (3) மலைநாடு (4) யாழ்ப்பாணக்குடா நாடு
2 பேதுருதாலகாலை 8281 சிவநெளிபாதம் 7360 தோட்டப்பாலை 7741
3 மலைநாட்டுப்பகுதியில் தென்மேல் காற்று மேலெழுவதனால் குளிரவடைந்து அதிகமழை கிடைக்கிறது. வடக்கு கிழக்கு, தாழ்நிலங்களில் தென்மேல் காற்று வரண்டகாற்ருக வீசுவதனால் அவை குறைவான மழையைப் பெறுகின்றன
4 அங்கு ஒருபருவத்தில் மட்டும் மழைபெய்வதனாலும் அம்மழை 75 அங்குலத்துக்குக் குறைவாயிருப்பதனாலும் தான் அடர்த்தியான காடுகள் காணப்படவில்லை
5 அங்கு ஆறுகள் இல்லாதமையால் தோட்டப பயிர்ச்செய்கைக்கு தரைக்கீழ் நீரையேபயன் படுத்த வேண்டியுள்ளது

2 1 பால், பாற்பொருட்கள், மீன் இறைச்சி தேன் பழவகை, என்பவற்றுடன் கோதுமை, வாற்கோதுமை உணவுகளும் பயன்படுத்தப்பட்டன.
2 எகிப்தியர் லினன் ஆடையை அணிந்தனர். ஆண்களும் பெண்களும் ஒரேவகையான மென்மையான உடைகளை அணிந்தனர் அவர்கள் சப்பாத்து தொப்பி என்பவற்றுடன் பலவகையான ஆபரணங்களையும் அணிந்தனர்
3 இந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த பொதுமக்கள், சுட்டசெங்கற்களால் கட்டப்பட்ட சிறியதும் பெரியதுமான வீடுகளில் வாழ்ந்தனர் அவற்றில் சில மாடிவீடுகளாகவும் காணப்பட்டன கிராமப்புற வீடுகள் களிமண்ணினால் மெழுகப்பட்டு தரையில் கோரைப்பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன சுவர்கள் நன்குபூச்சிடப்பட்டு அவற்றில் அலங்காரப் பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான வீடுகளில் கிணறுகளும் குளியலறைகளும் அமைந்திருந்தன
4 சீனர், பலவகையான களிமண்ணைப் பயன்படுத்திப் பொருட்களைச் செய்து அவற்றுக்கு பல வர்ணங்களைத்தீட்டினர். அவர்கள் செம்பு ஈயம் வெண்கலம் தங்கம் ஆகியவற்றினாலும் மரத்தினாலும் பல பொருட்களைச் செய்தனர் அவர்கள் கற்கள் எலும்பு கொம்பு முதலியவற்றில் செதுக்குவேலைகளைச் செய்வதிலும் திறமைபெற்றிருந்தனர், சீனர்களின் கண்டுபிடிப்புகளில் திசையறிகருவி, வெடிமருந்து என்பன முக்கியமானவை. அவர்கள 1 வருடத்தை 365 நாட்களாகவும் மாதங்களாகவும் பிரிக்கத்தெரிந்திருந்தனர்

1 ஆரியர்கள் முன்னர் வாழ்ந்த பிரதேசத்தில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டமை அங்குகாலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டமை, தொற்று நோய்கள் பரவியமை, பகைவர்களால் தாக்கப்பட்டமை ஆகியன அவர்கள் இடம்பெயர்ந்தமைக்குக் காரணங்களாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 கலிங்கப் போரில் ஏற்பட்ட அழிவினால் சஞ்சலமுற்ற அவனது மனதுக்கு புத்த மதம் சாந்தியைக் கொடுத்தபடியால் அவன் அம்மதத்தை தழுவினான்

3 புத்ததர்மத்தின்படி தன்வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அசோகன் புத்தர்மதக் கருத்துக்களைக் கற்றூண்களிலும் பாறைகளிலும் பொறிப்பித்தான் பௌத்த தூதுக்குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினான் இந்தியாவின் பல்வேறுபகுதிகளிலும் பௌத்த தூபிகளையும் விகாரைகளையும் நிறுவினான்

4 சமுத்திரகுப்தன் காலத்தில் குப்தஇராச்சியம் மிகவிரிவடைந்தது அங்கு கலைகள், இலக்கியம் இந்துசமயம் ஆகியன உன்னதநிலையையடைந்தன. குப்த அரசுவெளி நாடுகளுடனும் வர்த்தகபண்பாட்டு தொடர்பு வைத்திருந்தது இதனால் குப்த அரசின் புகழ் எங்கும்பரவியது இக்காரணங்களினால் தான் சமுத்திர குப்தனின் காலம் ' இந்தியவரலாற்றில் பொற்காலம்'' எனப்பட்டது

4 1 1638 ம் ஆண்டு உடன்படிக்கையின்படி. போத்துக்கீசரைத் துரத்துவதற்கும் போரின்போது கைப்பற்றும் கோட்டைகளை இராசசிங்கனிடம் கையளிப்பதற்கும், அவன்விரும்பினால் மட்டும்தமது போர்வீரரைக் கோட்டைகளில் நிறுத்திவைக்கவும் ஒல்லாந்தர் சம்மதித்தனர் அதேசமயம் போர்ச் செலவுகளைஈடுசெய்ய ஒல்லாந்தருக்குக் கறுவா, மிளகு ஆகியவற்றைக் கொடுக்கவம் அவர்கள்மலைநாட்டுடன் வர்த்தகம்செய்ய அனுமதிக்கவும் இராசசிங்கன் ஒப்புக் கொண்டான.

2 இலங்கையின் கறுவாவர்த்தகத்தைக் கைப்பற்றவும் அதற்காகத் தமது போர்வீரர்களைக் கோட்டைகளில் நிறுத்திவைக்கவும் ஒல்லாந்தர் திட்டமிட்டபடியால் உடன் படிக்கையை மீறினர்

3 இவ்வுடன்படிக்கையை மீறியதனால் ஆத்திரம் மேலிட்ட இராசசிங்கன் ஒல்லாந்தரின் பரமவிரோதியானான் அவன் கரையோரப் பகுதியில் அவர்களுக் கெதிரான கலகங்களைத் தூண்டிவிட்டான். ஒல்லாந்தரின் ஆட்சிக்குட் பட்டபகுதிகளைத் தாக்கி அழிவுவிளைவித்தான். ஒல்லாந்தருக்கு இறைச்சிக்காக ஆடு மாடுகளைக் கொடுக்க வேண்டாமெனத் தடைவிதித்தான். அவர்களுடன் இறக்கும் வரை போரிட்டு வந்தான்.

4 இராசசிங்கனை கண்டியமக்கள் தமது சுதந்திரபாதுகாவலனாக மதித்தனர் அவன் போத்துகீசராட்சியை முடிவுறச்செய்ததே அதற்குக்காரணம் ஆனால் ஒல்லாந்தர் ஆட்சிக்கு அவன்வழிவகுத்ததனால் அவர்கள் அவர்கள் மனக்கசப்புற்றனர், அன்றியும் அவனது ஓயாத போர்களினாலும் மக்கள் சோர்வடைந்து அவனை வெறுக்கத் தொடங்கினர்.

இராசசிங்கனைத் தமது பரமவிரோதியாக ஒல்லாந்தர்கருதினர். அவன் அவர்களுக்கு விளைவித்த தொல்லைகளும் நஷடங்களுமே அதற்குக் காரணங்களாம் இதனால்தான் அவர்கள் மீண்டும்ஒரு முறை அவனுடன் உடன்படிக்கை செய்துநாட்டில் அமைதியை நிலைநாட்ட விரும்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 1 மூலப்பொருள், வலு, போக்குவரத்து, நீர் சு ைத மூலதனம், காலநிலை தொழிலாளர் முதலியவசதிகளும் அரசாங்க ஆதரவும் கைத்தொழில்களை ஓரிடப்படுத்தும் காரணிகளாம்.

2 இரசாயனக்கைத்தொழில் இது பரந்தனில் அமைந்துள்ளது இதற்கு வேண்டிய மூலப்பொருளான உப்பு ஆனையிறவிலிருந்து கிடைக்கிறது. வலு கிளிநொச்சி உப மின்நிலையத்திலிருந்து கிடைக்கிறது நீர் இரணைமடுவிலிருந்தும் (தற்போது) குழாய்க்கிணறிலிருந்தும் பெறப்படுகிறது. பரந்தனில் இடவசதி, போக்குவரத்து வசதி ஆகியன உள்ளன இது ஒருஅரசகூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படுவதில் மூலதன வசதியுள்ளது இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தை உண்டு.

3 நீர்மின் போதியளவு கிடைத்தல் மூலப்பொருட்களை அயல்நாடுகளிலிருந்து பெறக்கூடியதாயிருத்தல், தொழிலாளர் போதியளவு கிடைத்தல், கிழக்கு, மேற்குநாடுகளில் சந்தைவசதி உள்ளமை வெளிநாட்டு மூலதனத்தையும் பெறக்கூடிய வசதி உள்ளமை, ஆகியன யப்பான கைத்தொழில் துறையில் முன்னேற உதவியுள்ளன

i 1 குடியேற்றநாட்டு ஏகாதிபத்தியங்களை (பேரரசு) ஏற்படுத்தி ஆதிக்கம்செலுத்த வேண்டுமென்னும் ஆவல், கிறிஸ்தவமதத்தை உலகில் பரப்ப வேண்டுமென்ற அவா, சிலஐரோப்பிய நாடுகளில் நிலவிய அரசியல், சமய நிலைகளில் அதிருப்தியுற்றவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியமை, ஆகியவற்றுடன் வர்த்தக தேவைகளும் ஐரோப்பியரின் குடியேற்றங்கள் ஏற்படகாரணங்களாயின

2 நாடுகளைக் கைப்பற்றுதல். அங்குள்ளசுதேசிகளைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருதல், அவர்களது செல்வத்தை அபகரித்தல் இயற்கைவளங்களைச் சுரண்டுதல் ஆகியன ஐரோப்பிய ஆதிக்கத்தின் நான்கு அமிசங்களாகும்

3 பலம்வாய்ந்த கடற்படை இருந்தமை கடலோடுவதில் திறமையிருந்தமை குடியேற்றவாசிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் காணப்பட்டமை என்பவற்றினால் தான் இங்கிலாந்து குடியேற்றப் போட்டியில் முன்னணியில் நின்றது.

4 கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களைப் பெறுவதும் சுதேசிகளின் பொருளாதாரத்தைக் கீழ்நிலையில் வைத்திருக்க வேண்டிய அவசியமும் குடியேற்றச் சுரண்டல் நிகழக் காரணங்களாம்.

iii 1 1 கோடியே 27 இலட்சம் மக்கள்

2 சுமார் 30 இலட்சம் பேர்

3 14 வயதுக்குட்பட்டோர் மாணவர்களாகும் இவர்கள் உழைப்பவர்களில் சாந்திருப்பவர்களாகும். எனவே இத்தொகை அதிகரிக்குமளவு நாட்டின் கல்வி நிர்வாகச் அதிகரிக்கும்.

4 1946 அளவில் மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டமையாலும் சுகாதாரமருத்துவ வசதிகள் அதிகரித்தமையாலும் நாட்டில் இறப்புவீதம் வீழ்ச்சியடைந்தது. அதேசமயம் வாழ்க்கைதரம், கல்வி என்பவற்றின் உயர்ச்சியினுல் விரும்பத்தக்க சுகாதாரப் பழக்கவழக்கங்கள் ஏற்பட்டன மேலும் மக்களின் இடப்பெயர்ச்சி இடநெருக்கடி, நகரவாழ்கை முறை முதலியன பிறப்பு விகிதத்தைக் காட்டின. இக்காரணங்களினுல் சனத்தொகை விரைவாக அதிகரித்தது (2.8 வீதத்தில்)

5 சனத்தொகை அதிகரிப்பு நாட்டின்பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கும். அபிவிருத்தி குறைந்த ஒரு நாட்டில், சனத்தொகை பெருகும் போது மக்களின் நுகர்ச்சி அதிகரிப்பதனுல் உற்பத்தித்துறைக்கு அதிகம் செலவிட முடியாது மேலும் சனத்தொகை விரைவாக அதிகரிக்கும் போது உழைப்பவர்களைச்சார்ந்திருப்போர் தொகை (0—15 வயதினர்) அதிகரிப்பதனுல் சேமித்தல் சிரமமானது அத்துடன் கல்வி, சுகாதாரம் மருத்துவ சேவை சமூகசேவை வீடமைப்பு என்பவற்றிலும்அதிக செலவினம் ஏற்படும் இக் காரணங்களினுல் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது

v அ 1 நமக்குத் தேவையான பொருட்களை வெளிநாடுகளில் வாங்க
i முடியாமை வெளிநாடுகள் எம்முடன் வர்த்தகம் செய்யத்தயங்குதல் என்பன வெளிநாட்டு நாணயமாற்றுக்குறைவால் ஏற்படும் பிரச்சனைகளாம்

2 ஸ்ரேலிங் இங்கிலாந்தின் நாணயமாகும் அந்நாட்டின் உற்பத்தி அதிகமாயிருப்பதனுலும், அதன் உற்பத்திப் பொருட்களுக்கு உலகில் அதிககேள்வி யிருப்பதனுலும் ஸ்ரேலிங்நாணயம் வலுவுள்ள நாணயமாயிருக்கிறது. எமது உற்பத்தியும் எமது நாட்டிலிருந்து வெளிநாடுகள் வாங்கக்கூடிய பொருட்களும் குறைவு. இதனுல் "ரூபா" வலுவற்ற நாணயமாயுள்ளது

3 எமது ஏற்றுமதி மூலம் பெறப்படும் வெளிநாட்டு நாணயம் இறக்குமதி செய்ய வேண்டிய பொருட்களை வாங்குவதற்குப் போதாதிருப்பதே வெளிநாட்டு நாணயமாற்று நெருக்கடி ஏற்படக் காரணமாகும்.

4 ஏற்றுமதியையம் பன்முகப் படுத்தல் இறக்குமதிப் பிரதியீடு செய்தல் புதிய சந்தைகளைத் தேடுதல் சுதேச வர்த்தக கப்பற் சேவையைவிரிவுபடுத்தல் சுங்கவரியற்ற வர்த்தகக் கூட்டமைப்பை ஏற்படுத்தல் ஆகியன

ஆ 1 நாட்டில் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், அத்தியாவசியப் பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப் புறங்களில் கைத்தொழில்களை விருத்தி செய்தல். சிறுகைத்தொழில்களுக்கு வேண்டிய உபகரணங்களை உதவும் மூலக்கைத் தொழில்களை வெளிநாட்டுச் செலாவணி சம்மந்தப்படாத கைத்தொழில்களில் கூடிய கவனம் செலுத்துதல், ஏற்றுமதிக்கு ஏற்ற பொருட்களை உற்பத்தி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தக்கதாக கைத்தொழிலை விருத்தி செய்தல் ஆகியன ஐந்தாண்டுத் திட்டத்தின், கைத்தொழில் சம்பந்தமான நோக்கங்களாகும்

2 புவிச்சரிதவியல், கனிப்பொருள் திணைக்களம், இலங்கைவிஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை பெரும்பாக அபிவிருத்திச் சபைகள் ஆகியன கைத்தொழில்களுக்கு உதவுகின்றன.

3 ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் கிராமபுறங்களில் சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதில் இச்சபைகளுக்கு அதிகபங்களிக்கப்பட்டிருக்கிறது. இவை பயிர்த் தொழில் உள்ளூர்மூலப் பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பிக்கக்கூடிய கைத்தொழில்கள் பற்றிய திட்டங்களை வகுத்து அரசின் அங்கீகாரத்தை பெற்று அமுல் செய்கின்றன. இவ்வாறு, தென்னை பனை கித்துல்என்பவற்றின் அடிப்படையிலான கைத்தொழில்கள் மரஉற்பத்திப் பொருட்கள மட்பாண்டப்பொருட்கள் ஆகியவற்றை விருத்திசெய்வதிலும் பழக்களைத் தகரத்தில் அடைத்தல் போன்ற தொழில்களிலும் இச்சபைகள் ஈடுபடுகின்றன.

V 1 ஒவ்வொருவரும் தமது ஆளுமையை வளர்ப்பதற்காக யாவருக்கும் சமசந்தர்ப்பங்களை வழங்கலும் சமதர்மப் பொருளாதாரமுறையையும் அமைப்பையும் உருவாக்குவதும் மாணவனின் திறன்களை விருத்திசெய்து, அவன் தன் வாழ்க்கையைத் திட்டமிட உதவுவதும் பிரதானமான நோக்கங்களாம்

2 பழைய கல்வித்திட்டம் புத்தகப் படிப்புக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தது அது வசதியுள்ளவர்களுக்கே அதிக வாய்ப்பை வழங்கியது புதிய கல்வித் திட்டம் தொழிற்கல்விக்கும் முக்கியத்துவம் கொடுப்பதோடு எல்லோருக்கும் சம வாய்ப்பை அளிக்கிறது

3 நாட்டின் அபிவிருத்திக்காக இயற்கை வளங்களை விருத்திசெய்வதற்கு வேண்டிய அறிவு, கைவன்மை வினைத்திறன் மதிப்பீடு பற்றிய விளக்கம ஆகியவற்றைக்கல்வி மூலமே பெறலாம் மேலும் ஒருநாட்டின் மக்கள் அதற்குப் பயனுள்ளவர்களாகவும் ஏற்ற மனப்பாங்குள்ளவர்களாகவும் இருப்பதாயின் ஒரு பொருத்தமான கல்வித் திட்டமே அதற்கு உதவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I

(1) 2 (2) 4 (3) 3 (4) 4 (5) 3 (6) iv (7) iii (8) ii (9) i
(10) 3 (11) 3 (12) 3 (13) 4 (14) iii (15) 3 (16) iii (17) 3
(18) 4 (19) 2 (20) 1 (21) iv (22) 3 (23) ii (24) iv (25) 2
(26) 2 (27) 2 (28) iv (29) 3 (30) 4 (31) 2 (32) 3 (33) 3
(34) ii (35) 2 (36) i (37) 3 (38) 2 (39) 3 (40) 4

## வினாத்தாள் — 2.

(1) 1 கடல்தேள் டிரைலோபைட் மரஅட்டை

2 பாறைத்தட்டுப் படலங்களுக்கிடையில், பழுதடையாது பேணப்பட்டுள்ள பழைய உயிரினங்களின் பாகங்கள் அல்லது அடையாளங்களே உயிர்ச்சுவடுகளாம்.

3 கேம்பிரயன் காலத்து உயிரினங்கள் கஞ்சி அல்லது நுங்கு போன்ற மிருதுவான உயிரினங்களாயிருந்தபடியால்தான் உயிர்ச்சுவடுகள் காணப்படவில்லை

4 டைனோசர்களே மீசோசோயிக் யுகத்தில் தலைமைப்பீடத்திலிருந்தன

5 தொற்று நோய் பரவியமை, சிலபாலூட்டும் பிராணிகள் அவற்றின் முட்டைகளை அழித்துவிட்டமை, காலநிலை குளிரானதாக மாற்றமடைந்தமை, என்னும் காரணங்களால் அவை அழிந்திருக்கலாம்

(2) 1 இந்துநதிப்பள்ளத்தாக்கு மக்கள் கோதுமை, வாற்கோதுமை எள்ளு என்பவற்றை உணவுக்காகப் பயன்படுத்தினர் இவற்றைதவிர பால், பாற்பொருட்கள், மீன். முட்டை பன்றி ஆடு என்பவற்றின் இறைச்சி ஆகியவற்றையும் உண்டனர்

2 எகிப்தியர் வனைகில்லின் உதவியுடன் களிமண்ணிலும் வேறு உலோகங்களினாலும் பாண்டங்களை உருவாக்கி வர்ணம் தீட்டினர் அவர்கள் ''சிரேபர்து'' முறைப்படி வெண்கலச் சிலைகளை வார்த்தனர். மேலும் எகிப்தியர் கட்டிடக்கலை சிற்பம் ஓவியம் என்பவற்றிலும் சிறந்து விளங்கினர் அபுசிம்பல கோவிலும் அங்குள்ள ஒரு அரசசிலையும் பிரமிட்டுக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. எகிப்தியர் நிலஅளவீட்டுமுறையை ஏற்படுத்தியதோடு, கணித அறிவிலும் சிறந்து விளங்கினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தை 365 தினங்களாயும் 12 மாதங்களாகவும் பிரித்துக் கலண்டர் தயாரிக்க அவர்கள் அறிந்திருந்தனர்

3 சுமேரியர், களிமண் தட்டுக்களில் மரத்தினாலான எழுத்தாணி ஒன்றினால் எழுதினர் அவர்களது எழுத்துக்கள் ஆப்பு உருவத்தில் அமைந்திருந்தன

4 ஹோயாங்கோ நதிப்பள்ளத்தாக்கு மக்கள் ஒழுங்கான திட்டத்துக்கமைய வீடுகளைக்கட்டி வாழ்ந்தனர். சாதாரண மக்கள், நிலத்தின்கீழ் வட்டமான அல்லது நீள் சதுரமான வீடுகளைக் கட்டினர் அரைவட்டமான வாயில் அதன்மேல் உள்ள கூரை. இறங்கிச் செல்லப்படிக் கட்டுகள் என்பவற்றுடன் காணப்பட்டன செல்வந்தர்கள் மரத்தினாலும் சாம்பல் நிறக் கற்களினாலும் கட்டப் பட்ட வீடுகளில் வாழ்ந்தனர் அவைகளின் மேடைகளில் அமைந்திருந்தன

(3) 1 திரு S W R D பண்டாரநாயக்கா அரசாங்கசபையில் உள்ளூராட்சி மந்திரியாக இருந்தகாலத்தில் உள்ளூராட்சி துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார் பழைய அநுராதபுரத்தைப் புனிதநகராக்கிப் புதிய நகர் ஒன்றை நிர்மாணிப்பதில் இவர் மூலகாரணராயிருந்தார் சமுதாயத்தில் நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்ட அரும்பாடுபட்டார்

2 மேலைத் தேசநாகரிகத்தின் செல்வாக்கை அகற்றிச் சிங்களவரின் சமய, கலாச்சார பாரம்பரியங்களைப் பேணி அவற்றுக்கு உரியஇடமளித்தல் ஆங்கில ஆட்சியை நீக்கி இந்நாட்டிற்கு உகந்த சுதந்திர ஆட்சிமுறையைத் தாபித்தல். சர்வதேச அரங்கில் கூட்டுச் சேராக் கொள்கையைப் பின்பற்றுதல். தேசிய மொழிகளுக்கும், ஆயுர்வேத வைத்தியமுறைக்கும் உரிய இடமளித்தல் காணியற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், தோட்டங்களைத் தேசியமயமாக்குதல் ஆகியன இவரதுகொள்கைகள் 1956 இல் பிரதமராகிய பின்னர் பஸ் போக்குவரத்தையும் துறைமுகத்தையும் தேசியமயமாக்கினார் வித்தியோதய வித்தியலங்கார, பிரிவேனுக்களைப் பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்திச் சிங்கள மொழியில் உயர்த்திச் சிங்கள மொழியில் உயர்கல்விக்கு வசதிசெய்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) 1 சம்பிரதாய முறையின் கீழ் மண் பாதுகாப்பு விடயமாக மக்கள் எவ்வித நடவடிக்கையு மெடுப்பதில்லை. மண்ணுக்கு ஏற்ற பயிரையும் செய்கை பண்ணுவதில்லை இதனால் மண் வளங் குறைவதோடு மண்ணரிப்பும் ஏற்படுகிறது

2 புதியமுறையிற் பயிர் செய்வோர், மண் பாதுகாப்பில் கூடிய கவனஞ் செலுத்துகின்றனர் மண்ணின் வளத்தை பேணுவதற்காக இரசாயனப் பசளையையும் இயற்கைப்பசளையையும் அதிகமாகப் பாவிக்கின்றனர் அன்றியும் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக, சரிவுகளைப் படிகள் போல வெட்டுதல், கற்களால் வரம்புகளை அமைத்தல் சாய்வுக் கேற்ப உழுதல் சுழல்முறையில் பயிர்செய்தல் மரஞ் செடிகளை, புல்வகைகளை நடுதல் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர்

3 பழையமுறையின் கீழ் மாக்கலப்பைகள் மண்வெட்டிகள் ஆகியன பயன்படுத்தப்பட்டன இன்றையவிவசாயிகள் நிலத்தைப் பண்படுத்தல் விதைத்தல் நாற்றுநடுதல், சுடுமிதித்தல் அறுவடைசெய்தல் இரசாயனமருந்துகளைத் தூவுதல் ஆகியவற்றுக்கு எந்திரங்களைபயன்படுத்துகின்றனர்.

4 பழையமுறையின் கீழ் பயிர்களைப்பீடிக்கும் நோய் பூச்சி புழுக்கள் என்பவற்றை தடுப்பதற்கும் களைகளை நீக்குவதற்கும் இரசாயன மருந்துகளோ கிருமிநாசினிகளோ பயன் படுத்தப்படவில்லை இன்றைய விவசாயிகள் அவற்றை அதிகமாகப் பயன் படுத்துகின்றனர் இதனால் பயிரழிவு குறைந்து விளைச்சல் பெருகுகிறது.

(5) 1 முதலாளித்துவமுறை காணப்படும் முக்கியமான நாடுகள் — ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான்
சமதர்மமுறை — இரசியா, சீனு கியூபா

